www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—30 நவம்பர் '88

4-1

விலை ரூ: 1-50

ய-லெனினிய அரசியல் ஏடு



## நேரு நூற்றாண்டு பரம்பரை துரோகம்

படிப்பகம்

www.padippakam.com

# பாசிச ராஜீவுக்கு கருப்புக்கொடி



26.10.88 அன்று மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் தேவர் சிலை திறக்க பாசிச ராஜிவ் வருவதாக இருந்தது. ராஜீவுக்கு எதிர்ப்பு என்று வீர வசனம் பேசிய போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் போலீஸ் நிலையத்தில் கையொப்பமிட்டு நிபந்தனையின்றி சரணடைந்து தங்கள் கையாலாகாத்தனத்தை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டன. ஆனால் விவசாயிகள் விடுதலை முன்னணி, ஊழல்— உல்லாசப் பிரதமருக்கு கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டது. இரு பெண் தோழர்கள் உட்பட ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனுமதி கேட்டால் சிறை வாசம் நிச்சயம் என்பதால் போலீசிடம் எதுவும் சொல்லாமல் கருப்புக் கொடி காட்ட நிச்சயமானது.

போலிகம்யூனிஸ்டுகள், கைதாவதே தங்கள் போராட்டம் என கறுப்புக் கொடி காட்ட அனுமதி கேட்டு அதன்படியே முன்கூட்டியே கைதானார்கள்.

ஆனால் மக்களோ, பீரங்கித் திருடன்—ஈழக்கொலைகாரனுக்கு எதிர்ப்பாக இருந்தனர்.

நாங்கள் காலை ஒன்பது மணிக்கே உசிலம்பட்டி சென்று விட்டோம். கருப்புக் கொடியை வெளியே தெரியாமல் மறைத்து வைத்திருந்தோம். 10.20க்கு வரவேண்டிய பாசிசப் பிரதமர் ராஜீவ் 1 மணிக்குதான் வந்தார். ராஜீவ் வந்தவுடனே கருப்புக் கொடி ஏந்தி,

ஈழத்து கொலைகாரன் ராஜீவே திரும்பிப் போ!

பீரங்கித் திருடன் ராஜீவே திரும்பிப் போ!!

விவசாயிகளுக்கு நிலச் சீர் திருத்தத்தை அமுல்படுத்தாத பாசிஸ்டே திரும்பிப் போ!!!

என முழக்கமிட்டோம்.

ஏவிவிட்ட நாய்களென போலீசு கும்பல் எங்கள்மீது பாய்ந்து குதறியது. வாயைப் பொத்துவது, முடியைப் பிடித்திழுத்து முழங்காலால் முதுகில் முட்டி சித்திரவதை செய்வது என எங்களை சுற்றி வளைத்து மறைத்துவிட முயன்றன போலீசு நாய்கள். ஆனால் எங்களது முழக்கங்களை அமுக்க முடியவில்லை. கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடந்தது.

பின்னர் நாங்கள் போலீசு நிலையத்திற்கு கொண்டு செல்லப் பட்டோம். சர்க்கிள் பெருமாள் சாமி என்ற காட்டுமிராண்டி, 'நீங்க கருப்புக் கொடி காட்டிட் டீங்க. எங்களை இல்லடா உண் இல்லைன்னு ஆக்கிடுவாங்க' என பீதியடைந்து அலறினான். பெண் தோழர்களைப் பார்த்து 'தே டியா முண்டைகளா. பொம் ளைக்கு என்னலா அரசியல்' என யோலும் தகாக வார்த்தை களைப் பேசி பெண் தோழர்களை அடித்தான்.

பின்னாலேயே வந்த ரகசிய போலீசார் 5, 6 முறை எங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை கேட்டு பதிவு செய்தனர். சட்டையைக் கழற்றிச் சொல்லி மிரட்டி, புகைப்படமெடுத்தனர். போலீசார் பதினைந்து நாள் ரிமாண்ட் எழுதிக் கொடுக்க, மாஜிஸ்ட்ரேட்டோ 'ராஜீவ்தான் நாளை திரும்பி விடுவாரே' என்று கூறி மூன்று நாள் ரிமாண்ட் செய்தார். அன்றிரவே மதுரை மத்திய சிறைக்கு கொண்டு செல்லப் பட்டோம். சிறை செல்லும்போது, இடைவிடாது முழக்கமிட்டோம். பின்னர், ஒரு நாள் கழித்து சொந்த ஜாமீனில் வெளி வந்தோம்.

இந்த விசயம் வட்டாரம் முழுக்க பேசப்பட்டது. பல தினசரிகளும் செய்தி வெளியிட்டன. கூட்டத்தில் போலீசார் சுற்றி வளைத்துத் தாக்கிய போதும் உறுதியுடன் இடைவிடாது நாங்கள் முழக்கமிட்டதை மக்கள் பாராட்டினர். மக்கள் மத்தியிலிருந்து நமக்கு ஆதரவாக போலீசுமீது கல்லெறிகூட விழுந்தது.

வி.வி.முவின் இப்போராட்டம் காட்டுத் தீயாகப் பரவி மக்கள் மத்தியிலே பெருத்த ஆதரவைப் பெற்றுத் தந்துள்ளது. அரசியல் ரீதியில் எதிரியை எதிர்ப்பதில் இம்மியளவும் பின் வாங்காத அஞ்சா நெஞ்சுடைய போராளிகளைக் கொண்ட அமைப்பு வி.வி.மு—தான் என்ற பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகள் விடுதலை முன்னணி
உசிலை வட்டம்.

## போபர்ஸ் கொள்ளையருக்கு எதிராகப் போர்க்கொடி!

உள் நாட்டில் அம்பலப்பட்டு போயுள்ள பாசிச ராஜீவ் கும்பல் இப்போது உலக அளவிலும் அம்பலப்பட்டு வருகிறது. இந்தியாவுக்கு போபர்ஸ் துப்பாக்கிகளை ஏற்றிக் கொண்டு புறப்படவிருந்த ஆயுதக் கப்பலை எதிர்த்து ஸ்வீடன் நாட்டு மக்கள் உட்டூவல்லா துறைமுகத்தில் போர்க்கோலம் பூண்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

1986ல் போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வாங்க ராஜீவ் கும்பல் போட்ட ஒப்பந்தப்படி இப்போது பெருமளவில் துப்பாக்கிகள் ஸ்வீடனிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

"பாகிஸ்தானுடன் மோதல் கொள்கையைக்கொண்டுள்ள இந்தியாவுக்கு பெருமளவில் ஆயுத ஏற்றுமதி செய்வது அப்பகுதியில் பதற்ற நிலையை ஏற்படுத்தும். இது சுவீடன் நாட்டு ஆயுத ஏற்றுமதி சட்டத்துக்கே விரோதமானது. மேலும் இந்த ஆயுத பேரத்தில் பெருமளவு ஊழலும் கொள்ளையும் நடந்துள்ளது" என்று கூறி ஆர்ப்பாட்டம் நீண்ட நேரம் தொடர்ந்தது. போலீசார் ஆர்ப்பாட்டக்காரர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியபிறகே ஆயுதக் கப்பல் புறப்படமுடிந்தது.

போபர்ஸ்கொள்ளையைஸ்வீடன் பத்திரிக்கைகள் அம்பலப்படுத்திய போது அத்தனையும் பொய் என்று எகிறிப் பாய்ந்தது பாசிச ராஜீவ் கும்பல். இப்போது போபர்ஸ் கொள்ளையருக்கு எதிராக ஸ்வீடன் மக்களே ஆர்த்தெழுந்து பாசிச ராஜீவ் கும்பலின் முகத்தில் கரிபூசிவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

1

16—30 நவம்பர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1.50
ஆண்டு சந்தா : ரூ. 36

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# மாலத்தீவுகள்-இலங்கை ஆக்கிரமிப்பு இந்துமாக்கடல் பிராந்திய ஆதிக்கம்

"வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகளையோ, துண்டுப் பிரசுரங்களையோ வைத்திருப்பதாகக் கண்டவர்களை உடனடியாகச் சுட்டுக் கொன்று விடவும்; அவற்றைத் தனது வீட்டுக்குள்ளோ, வெளியோ பார்வைக்கு வைப்பவர்களைப் பிடித்துப் போய் இராணுவக் கோர்ட்டு மூலம் மரணதண்டனை விதிக்கவும்;அத்தியாவசியப்பணித் துறைகளில் வேலை செய்வோரை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டுவோருக்கும் நிர்பந்திப்போருக்கும் மரணதண்டனை நிறைவேற்றவும்" என்று இலங்கை அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது.

இருந்த போதும், ஜெயவர்த்தனே பதவி விலகுவது; நாடாளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் கலைப்பது; அனைத்துக் கட்சி இடைக்கால அரசின் மேற்பார்வையில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவது; இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்வது; இந்திய ராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றுவது ஆகிய கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு விடுவது என்று இலங்கை "மக்கள் விடுதலை" முன்னணி (ஜே.வி.பி) முடிவு செய்துள்ளது.

ஜெயவர்த்தனே அரசுக்கெதிரான ஜேவிபியின் தனிநபர் பயங்கரவாதத்தோடு மக்கள்திரள் இயக்கங்களும் சேர்ந்து கொண்டுள்ளன. தென் கோடியில் தொடங்கிய பள்ளி சிறுவர்களின் வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் தென்னிலங்கை முழுவதும் பரவி, பல்கலைக் கழகங்கள், பள்ளி—கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. அடுத்தடுத்து பொது வேலை நிறுத்தங்களும் கடையடைப்புகளையும் வெற்றிகரமாக நடத்தி தென்னிலங்கையை ஸ்தம்பிக்க வைப்பதில், அரசு நிர்வாகத்தை நிலைகுலைய வைப்பதில் ஜேவிபி வெற்றி பெற்று விட்டது. இராணுவ முகாம்களைத் தாக்கி ஆயுதங்களைப் பெருமளவு பறித்துச் செல்வதிலும், சிறைச்சாலைகளைத் தகர்த்து அரசியல் கைதிகளை விடுவிப்பதிலும்கூட வெற்றி பெற்றுள்ளது.

ஜேவிபியின் வேலை நிறுத்தம்—கடை அடைப்பு அழைப்பை ஏற்று மூடப்படும் ஆலைகள்—கடைகளை அரசு பறிமுதல் செய்யும்அவசரச்சட்டம் போட்டது, ஜெயவர்த்தனே அரசு. இருந்த போதும், வேலை நிறுத்தம்—கடையடைப்புக்கான கெடுமுடிந்தும்கூட அவை தொடர்கின்றன. அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்டதும் சுடும்படி ஊரடங்கு உத்திரவு போட்டு இராணுவத்தை ஏவியது, ஜெயவர்த்தனே அரசு. ஆனாலும் ஊரடங்கு உத்திரவைமீறி தென்னிலங்கை நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. கடந்த வியாழனன்று மூன்று நகரங்களில் இருபது பேரை இலங்கை இராணுவம் சுட்டு வீழ்த்தியது. 2000க்கும் மேலான ஆர்ப்பாட்டக்காரர்களைச் சிறைப்பிடித்தது. இவ்வளவு அடக்குமுறைகளுக்கும்பிறகு அரசு எதிர்ப்பு போராட்டங்களுக்குப் பெருகிவரும் ஆதரவு கண்டு ஜேவிபியின் கோரிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளும்புத்தமதக் குருமார்களும்கூட ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பாசிச ஜெயவர்த்தனே கும்பல் முற்றாகத் தனிமைப்பட்டுள்ளது, அந்தக் கும்பல் இந்துமாக் கடலில் தூக்கி எறியப்படுவதற்குமுன்பு, இலங்கையை இரத்தக் கடலில் மூழ்கடிக்கும் விதமாக படுகொலைகளைச் செய்கிறது. தென் ஆஃபிரிக்க இனவெறி அரசு, இஸ்ரேலிய ஜியோனிச மதவெறி அரசு, சிலியின் பாசிச அரசு ஆகியவற்றோடு போட்டி போட்டுக் கொண்டு அரக்கத்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. இந்த நிலையில் ஜெயவர்த்தனே அரசைப் பாதுகாப்பதற்கு பாசிச ராஜீவ் கும்பல் தனது அதிரடிக் கூலிப்படையை அனுப்புகிறது. அதன் அனைத்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் ஆதரிக்கும் இந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற நாளேடுகள் வெளியிட்ட இச்செய்தியை அரசு அதிகாரகள் வதந்தி என்று கூறி மறைக்க முயன்றுள்ளனர். ஆனாலும் இந்தியா அதிரடிப் படையை அனுப்பத் தயங்காது என்று சூசகமாக தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே கொடிய—பாசிச கும்பல்களில் ஒன்றானஜெயவர்த்தனே அரசை காப்பதற்கு அதிரடிப்படை அனுப்பும் பாசிச ராஜீவ் மாலத் தீவில் சட்டபூர்வமாக—ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் காப்பதற்காக அதிரடிப்படை அனுப்பியதாகக் கூறுகிறது. மாலத் தீவிலிருந்து "கூலிப்படையினரை" விரட்டி ஆட்சியை மீட்டது மிகப் பெரிய—அரிய சாதனையென்று சித்தரிக்கிறது. தொலைத் தகவல் தொடர்பையும், விமான நிலைய வசதியையும் துண்டிக்க வேண்டும் என்கிற சாதாரண போர் உத்திகூட அறியாத, அரைகுறைப் பயிற்சி பெற்ற 200 கூலிப்படை

படிப்பகம்

www.padippakam.com



மாலத்தீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்கள், வீடுவீடாக சோதனையிட்டபோது பிடிபட்ட ஒரு கூலிப்படை இளைஞனை கைது செய்து அழைத்துச் செல்கின்றனர். இவன் இலங்கையைச் சேர்ந்தவன்.

யினரை எதிர்த்துப் போரிட 1600 அதிரடிப்படையினரை, அதிநவீன ஆயுதங்களுடன் ஏவியது பாசிச ராஜீவ் கும்பல். கவசமான இரு கப்பல்களையும் மேலும் சில ஆயிரம் கடற்படையினரையும் அனுப்பியது. இந்திய இராணுவத்தைக் கண்டதும் ''கூலிப்படையினர்'' போரிடாமலேயே தப்பி ஓடினர். அவர்களை விரட்டிச் சென்ற இந்தியக்கடற்படை 46பேர்களை மட்டுமே பிடித்தது. மற்றவர்கள் அதிவேகப் படகுகளில் ஓடித் தப்பி விட்டனர். இதை மிகச் சிறந்த இராணுவச் சாதனையென்று இந்திய ஆக்கிரமிப்பு—விரிவாக்க வாதிகள் தம்மையே பாராட்டிக் கொள்கின்றனர்.

முதல் விமானத்தில் அதிரடிப் படையோடும், அடுத்த விமானத்தில் 35 ஆடுகளோடும் (மாலத்தீவில் கறிகிடைக்காதாம்) போய் இறங்கிய ஆக்கிரமிப்பு இராணுவம் அங்கேயே தங்கி விடுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்திய இராணுவம் காப்பாற்றிய அப்துல் கையூமின் அரசு சட்டபூர்வ—ஜனநாயக, நடுநிலை அரசு என்று பிரச்சாரம் செய்கிறார்கள். இவை அனைத்தும் பொய்யானவை.

300 கி.மீ அகலமும் 800 கி.மீ நீளமும் உள்ள கடற்பரப்பில் 1192 தீவுகளையும் தீவுத் திடல்களையும் கொண்டது மாலத் தீவுகள். அவற்றில் 200 களில் மட்டுமே இரண்டு லட்சம் மக்கள் வாழுகின்றனர். அங்கே ஜனநாயகமும் கிடையாது; ஒரு இழவும் கிடையாது. இரண்டு லட்சம் பேரில் 50 ஆயிரம் பேருக்குத்தான் ஓட்டுரிமை உண்டு. அவர்களும் ஏற்கனவே நியமனம் பெற்று இயங்கும் நாடாளுமன்றத்தால் நிறுத்தப்படும் நபரை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். வேறு யாரும் எதிர்த்துப் போட்டியிட முடியாது. எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, சாதாரண கலாச்சார அமைப்புகள்கூட மாலத் தீவில் இயங்க முடியாது; தடை செய்யப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான மாலத் தீவு மக்கள் கல்வி அறிவு பெறாதவர்கள், ஏழ்மையில் வாடுபவர்கள். அவர்களின் பூர்வீகம் இலங்கையும், இந்தியாவுமாகும். ஒரு கட்சி சர்வாதிகாரத்தின்கீழ் ஜனநாயக பூர்வமான எதிர்ப்புக்கே வழியின்றி அப்துல்கயூம் ஆளுகிறார். அவரது ஆட்சியில் லஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் கொடி கட்டிப் பறக்கின்றன. மாலத் தீவுகளின் மீது ஆதிக்கம் வகிப்பதற்காக பெரும் பணக்கார தரகுவியாபாரிகளுக்கிடையிலான மோதல் தொடர்ந்து நடக்கிறது. அதிலே ஒரு பகுதிதான் தற்போது 'கூலிப் படைகளை' வைத்து ஆட்சிக் கவிழ்ப்பு நடத்த நடந்தமுயற்சியுமாகும்.

''எவ்வளவு சிறிய நாடானாலும், அதன் சொந்தமக்களுடைய புரட்சிகரப் போராட்டங்கள் மூலமே ஒடுக்குமுறைஅரசுகளைத் தூக்கி எறிய வேண்டும். புரட்சிகர, ஜனநாயக மாற்றங்களை இறக்குமதி—ஏற்றுமதி செய்யவும் முடியாது— கூலிப்படைகளை வைத்து சாதிக்கவும் முடியாது'' என்று நாம் திட்டவட்டமாகக் கருதுகிறோம்.

அதே போல சிங்கள இனவெறி, தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளால் ஜனநாயகத்தை இலங்கையில்நிலைநாட்டவும் முடியாது. ஜேவிபியின் இந்தப் போக்குகளை எதிர்க்கும் அதேசமயம் பாசிச ஜெயவர்த்தனே கும்பலுக்கு எதிரான இலங்கை மக்கள் நடத்தும் ஜனநாயகத்துக்கான போராட்டமும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசபக்தப் போராட்டமும் நீதியானது. இந்தப்போராட்டங்களில் சிங்கள—தமிழ் மக்கள் இணைந்து எதிரிகளைத் தாக்க வேண்டும்.

இந்துமாக் கடல் பிராந்தியத்தில் ஜனநாயக அரசுகளைக் காப்பது, அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் நிலை நாட்டுவது என்கிற பொய்யான காரணங்களைக்கூறி இந்தப் பிராந்தியத்தின் இராணுவ—போலீஸ் அதிரடி குண்டனாக இந்திய அரசு மாறிவிட்டது. இதையேஇலங்கையிலும் மாலத் தீவுகளிலும் இந்திய அரசு நடத்தியுள்ள ஆக்கிரமிப்புகள் காட்டுகின்றன. அமெரிக்கா—ருஷ்யா ஆகிய இருமேல் நிலை வல்லரசுகளும் இந்துமாக் கடல் பிராந்திய ரௌடியாக—கூலிப் படையாக இந்தியாவை அங்கீகரித்து பயன்படுத்திக் கொள்வதென்று முடிவு செய்துள்ளன. மாலத்தீவுகளிலும் இலங்கையிலும் இந்தியா ஆக்கிரமிக்கும் முன் அவற்றின் அனுமதி பெற்றது.

இந்திய பாசிச ஆளும் கும்பலின் இந்த ஆக்கிரமிப்பு—விரிவாக்க நடவடிக்கைகளை வரவேற்று பகிரங்கமாகவே இந்தியப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. இன்னொரு இன—நாட்டு மக்களை தனது அரசு ஒடுக்குவதை ஆதரிக்கும்எந்த ஒருஇன—நாட்டு மக்களும் சுதந்திரமாக வாழ முடியாது. ஆளும் கும்பலின் ஆக்கிரமிப்பு விரிவாக்கச் செயல்கள்—போர்களின் முழுச்சுமையும் இந்த நாட்டு மக்கள்மீது சுமத்தப்படும். எனவேஇந்தியஆளும்கும்பலின் அனைத்துஆக்கிரமிப்பு—விரிவாக்க நடவடிக்கைகளையும் எதிர்ப்பது இந்த நாட்டு மக்களின் கடமையும் கட்டாயமும் ஆகிறது ●



படிப்பகம்

www.padippakam.com

## நூற்றாண்டு விழாக் காணும் நேரு!

# பரம்பரை துரோகம்

ஜவகர்லால் நேருவின் நூற்றாண்டு விழா இந்த மாதம் தொடங்குகிறது. அதைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்காக கோடி கோடியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பே விழாக் கமிட்டி அமைத்து விழாத்திட்டங்கள், ஏற்பாடுகள் பெருமளவில் நடக்கின்றன.

பரம்பரை வாரிசுரிமை, இந்திரா சாவின் அனுதாபஅலை ஆகிய வற்றினால் ஆட்சிக்கு வந்தது பாசிச ராஜீவ்கும்பல். அனுதாப அலை ஓய்ந்த பிறகு, பரம்பரை வாரிசுரிமையை மேலும் ஆணித்தரமாக நிலைநாட்டுவதற்கு—நியாயப்படுத்துவதற்கு தொடர்ந்து சில நாடகங்களை அது அரங்கேற்றி வருகிறது. காங்கிரசு நூற்றாண்டு விழா; நாற்பதாவது சுதந்திர ஆண்டு விழா; இப்போது நேரு நூற்றாண்டு விழா!

“சுதந்திரத்துக்கும், தேசிய ஐக்கியம் — ஒருமைப்பாட்டிற்கும் பாடுபட்ட ஒரே இயக்கம் காங்கிரசு. அதன் தன்னிகரற்ற ஒரே தலைமை நேரு—இந்திரா பரம்பரை. சுதந்திரத்திற்காக நேரு சொத்துக்களையும் — பதவிகளையும் தியாகம் செய்தார். அவரது மகளோ தேசிய ஐக்கியம்—ஒருமைப்பாட்டிற்காக உயிரையே தியாகம் செய்தார். எனவே தேசத்தை ஆளும் பரம்பரை வாரிசுரிமை ராஜீவ் காந்திக்கே உரியது.” இந்த ரீதியிலே நாட்டின் வரலாற்றை நேரு குடும்பத்துக்குரிய சொத்துரிமை உயிலாக எழுதி வைத்துக்கொள்ள நேரு—இந்திரா—ராஜீவ் பரம்பரை முயலுகிறது.

1975—76 அவசர நிலை பாசிச ஆட்சியின்போது, இந்திரா ஒரு “காலப்பெட்டகம்” தயாரித்தார். அதாவது “நாட்டின் விடுதலைக்கும், ஐக்கியத்துக்கும் பாடுபட்டது நேரு—இந்திரா பரம்பரைதான்” என்று வரலாற்றுக் குறிப்புகள் தயாரித்து, ஒரு பெரிய இரும்புக்குழாய்க்குள் போட்டு மூடி டெல்லி—செங்கோட்டையில் ஆழக்குழி தோண்டிப் புதைத்தார். பிற்காலத்தில் தோண்டிப் பார்ப்பவர்களுக்கு “இன்றைய வரலாற்றை”ச் சொல்வதற்கு இந்த ஏற்பாடு செய்து வைத்தார் நேரு—இந்திரா பரம்பரைக்குச் சாதகமாக இப்படிஒரு வரலாற்றுப் புரட்டு செய்வதை பல வரலாற்று வல்லுநர்களும், ஆசிரியர்களும் எதிர்த்தனர். 1977இல் ஜனதா ஆட்சிக்கு வந்தபிறகு அந்தக் “காலப் பெட்டக”த்தைத் தோண்டி எடுத்து அழித்தனர்.

பாசிச ராஜீவ்கும்பல் அப்படி ஒரு “காலப்பெட்டக”த்தைத் தயாரிக்கவில்லைதான்! என்றாலும் பலகோடி ரூபாய் செலவு செய்து “வரலாற்று முக்கியத்துவம்” வாய்ந்ததாக நேரு நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது. நேருவின் பரம்பரை கதையைத் திரித்துச் சொல்லும் பல நூல்கள்; பொறித்து வைக்கும் பல வரலாற்றுச் சின்னங்கள்; சினிமா, விடியோ உட்பட நேரு பரம்பரை “புகழ் பாடும்” பல விளம்பர—பிரச்சார ஏற்பாடுகள் தயாராகி விட்டன.

காற்றடித்தால் கலைந்து போகும் புகை மூட்டம். அதுபோல ராஜீவின் பிரச்சார—விளம்பரத் தில்லுமுல்லுகள் எல்லாம் அம்பலப் பட்டுப் போகின்றன. ஆயுதபேர ஊழல், வெளிநாடுகளில் கருப்புப் பணக்குவிப்பு ஆகியவை வெளி வந்தபோது காங்கிரசுநூற்றாண்டு



நேரு—இந்திரா —ராஜீவ் பரம்பரை

விழா, நாற்பதாவது சுதந்திர ஆண்டுவிழா நாடகங்கள் எல்லாம் பிசுபிசுத்துப் போயின. ஆனால் நேரு நூற்றாண்டு விழா என்கிற பிரச்சார—விளம்பர சரக்கு எப்படியும் வியாபாரமாகி விடும் என்று பாசிச ராஜீவ் கும்பல் நம்பியது.

ஏனெனில், எதிர்ப்பே இல்லாமல் எதிர்க் கட்சியினர் உட்பட நாட்டின் “எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்” ஜவகர்லால் நேரு. “நேரு—அலகாபாத் ஆனந்தபவன் உட்பட நாட்டுக்காக எல்லாம் துறந்த தியாகி; நேர்மை, துணிவு, பண்பு, ஆற்றல்மிகு ஜனநாயகவாதி; தீர்க்க தரிசனமும், புரட்சிகர சிந்தனையும் உடைய சோசலிசசிற்பி; உலக சமாதானத்துக்குப் பாடுபட்ட, பஞ்சசீல கொள்கைகளை வகுத்த ஆசிய ஜோதி.”—என்று பள்ளிச் சிறுவர்— சிறுமிகளாக இருக்கும்போதே மூளைச் சலவை தொடங்கி விடுகிறது.

குழந்தைகளை நேசித்த மாமா—நேரு. வெள்ளைக்காரிகளும், இளவரசிகளும்கூடமோகங் கொண்ட கதாநாயகன்—நேரு. இப்படிப் பலப்பல கதைகள். சுருக்கமாகச் சொன்னால் அந்த கோமான் வீட்டுக் கழிப்பறை கூட மணக்கும் என்கிற அளவுக்கு இன்றும் பிரச்சாரம் தொடர்கிறது.

போதாக்குறைக்குருஷ்ய சமூக ஏகாதிபத்திய-போலிக் கம்யூனிஸ்டுகள் வேறு இந்தக் கூட்டுப்பாடலில் சேர்ந்து கொண்டார்கள். “ருஷ்யாவுக்கு லெனினைப் போல, இந்தியாவுக்கு நேரு—நவயுக நாயகன்” என்று இவரை வைத்துக் கூத்தாடுகிறார்கள்.

இவ்வளவு பெருமை— புகழ் வாய்ந்த பரம்பரையின் வாரிசு தான்தான் என்று உரிமை பாராட்டிக் கொள்ள பாசிச ராஜீவ் தவறுவாரா? இரட்டிப்பு வேகத்தோடு, இரட்டிப்பு வெறியோடு நேரு நூற்றாண்டு விழா கொண்டாட ஏற்பாடுகள் பலவும் ராஜீவ்கும்பல் செய்தது. ஆனால் பாசிச ராஜீவ் கும்பலின் பேராசையில் வெடி வைத்துத் தகர்க்கும் வகையில் இப்போது சில ஆதாரங்கள் வெளியாகி உள்ளன. பெண்பித்து, ஏகாதிபத்திய அடிமை மோகம், சுயகௌரவம் ஆகியவை காரணமாக நாட்டைப் பிளவுபடுத்துவதில் ஜவகர்லால் நேருவின் துரோகத்தனம் இப்போது அம்பலப்பட்டுப் போயுள்ளது.

காந்தி—நேரு தலைமையிலான காங்கிரசின் துரோக வரலாறை விமர்சனபூர்வமாகக் கற்றறிந்த அனைவரும் கூறும் உண்மைகள்தான் இவை. இருப்பினும் காந்தி—நேருவின் மீது குருட்டுத் தனமாக வளர்க்கப்பட்டுள்ள தனி



படிப்பகம்

www.padippakam.com

நபர் வழிபாடு கண்களை மறைத்தது. எனவே நாட்டு மக்களில் பலரும் இதை அறியமுடியாமற் போனது. அரசு— அதிகார பூர்வப் பிரச்சாரத்துக்கு மாறாக, காந்தி —நேரு கும்பலுக்கு எதிராக மாற்றுக் கருத்துச் சொல்பவர்கள் தேசத்துரோகிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர். காந்தி—நேரு தலைமையிலான காங்கிரசுக் கும்பலில் முக்கியமான ஒருவரே, நேருவின் தேச விரோதத் தவறுகள் குறித்து கொடுத்துள்ள வாக்குமூலங்கள் இப்போது வெளிவந்துள்ளன.

மௌலானா அபுல் கலாம்—ஆசாத்—காந்தி—நேரு ஆகிய காங்கிரசுத் தலைமையின் கூட்டாளிகளில் ஒருவர்—முக்கியமானவர். காங்கிரசுக் கட்சியில் அதிக ஆண்டுகள்—குறிப்பாக அதிகார மாற்றத்துக்கான பேரங்கள் மும்முரமாக நடந்த காலனிய ஆட்சியின் கடைசி ஆண்டுகள்—தலைமைப் பதவியில் இருந்தவர். அந்த பேரங்களில் ஏகாதிபத்திய—காலனிய அரசுடன் காங்கிரசு சார்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தியவர். அதிகார மாற்றத்துக்குப் பிறகு, நேருவின் மத்திய மந்திரிசபையில் எட்டாண்டுகளாக கல்வி—கலாச்சார மந்திரியாக இருந்தவர்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத், மத்திய மந்திரியாக இருந்தபோது ‘‘இந்தியா சுதந்திரத்தை வெல்வது’’ என்கிறநூலை எழுதினார். அவர் அரபு மற்றும் உருது மொழியில் வாசகத்தைச் சொல்லச் சொல்ல அவரது செயலாளரும், பின்னாள் மத்திய மந்திரியானவரும் ஆகிய ஹுமாயூன் கபீர் அதைப் பதிவு செய்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தொகுத்தார். அந்த நூலில் நேருவின் தவறுகள் குறித்துப் பலஉண்மைகள் இருந்ததால் அதை முழுமையாக அவர் வெளியிடவில்லை. அப்போதைய அரசியல் நிலைமையையும் நேருவையும் அது பாதிக்கும் என்று ஆசாத் அஞ்சினார்.

எனவே அந்த உண்மைகள் அடங்கிய முப்பது பக்கத்தை தனியே எடுத்து, கல்கத்தா தேசிய நூலகத்தில் ஒரு பிரதியும் புது டெல்லி தேசிய ஆவணக் காப்பகத்தில் ஒரு பிரதியும் வைக்கும்படி செய்தார். அந்த 30 பக்கங்கள் இல்லாமலேயே அப்போது நூலைப் பிரசுரிக்கும்படியும், 30 ஆண்டுகளுக்கு பிறகு அதை நூலில் சேர்த்துப் பிரசுரிக்கும்படியும் எழுதி வைத்தார்.

ஆசாத் இறந்த பிறகு, அந்நூலை அச்சிடும் உரிமையை தொகுப்பாசிரியர் கபீரிடம்இருந்து ‘‘ஓரியண்ட் லாங்மேன்’’ என்ற ஆங்கிலேய நிறுவனம் பெற்றது. நிறுத்தி வைத்திருந்த 30 பக்கங்கள் இல்லாமலேயே நூலை வெளியிட்டது. இந்த ஆண்டு பிப்ரவரியில் ஆசாத் விதித்திருந்த கெடு முடிந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு பரம்பரை வாரிசுரிமை பெற்று நேருவின் பேரன் ராஜீவ் ஆட்சியில் இருப்பார் என்று, பாவம், மௌலானாவுக்குத் தெரியுமா என்ன? அவர் நிறுத்தி வைத்த 30 பக்கங்களில் தனது தாத்தா நேருவுக்கு எதிரான உண்மைத் தகவல்கள் இருக்கும் என்று அஞ்சினார் பாசிச ராஜீவ். எனவே இப்போதைய காங்கிரசு கட்சிப் பொதுச் செயலாளர் நஜ்மா ஹெப்துல்லா என்பவரை ஏவினார். மௌலானாவின் சகோதரியுடைய பேத்தி என்ற முறையில் பரம்பரை வாரிசு உறவு கொண்டாடினார், நஜ்மா.

ஆசாத்தின் நூல்மீது தனக்குத் தான் வாரிசுரிமைஉண்டு; தொகுப்பாசிரியர் கபீருக்கோ, பதிப்பகத்தார் ஓரியண்ட் லாங்மேனுக்கோ உரிமை கிடையாது—என்றுகோரி, அந்த 30 பக்கத்தையும் கைப்பற்றி, முடக்கி விடுவதற்காக வழக்குத் தொடர்ந்தார். அதை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடைஉத்திரவு வாங்கினார். ராஜீவின் எடுபிடி நஜ்மா வழக்குத் தொடுத்து, தடையுத்திரவு பெறாமல் இருந்திருந்தால் கடந்த பிப்ரவரியிலேயே அது வெளிவந்திருக்கும். பிறகு ஏற்பட்ட அரசியல் சந்தடியில் அதன் முக்கியத்துவம் இந்நேரம் குறைந்து போயிருக்கும்.

ஆனால் அந்த 30 பக்கத்தை வெளியிடுவதைத் தடுத்து முடக்கி விடுவதற்கு பாசிச ராஜீவ் கும்பல் செய்த முயற்சி அதற்கு எதிராகவே விடிந்தது. வழக்கு முடிந்து, ‘‘ஓரியண்ட் லாங்மேன்’’ நிறுவனத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பாகி இப்போது நூல் வெளிவரப் போகிறது. அதாவது ஜவகர்லால் நேருவின் நூற்றாண்டு விழா தொடங்கும் சமயத்தில், வரலாற்றுப் புரட்டுகள் பல செய்து நேரு பரம்பரை ஆட்சி வாரிசுரிமைக்கான பிரச்சாரம்—விளம்பரம் மும்முரமாக தொடங்கும் சமயத்தில் நூல் வெளிவர இருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு—ஐக்கியத்தைக் காத்திட பாடுபட்ட—தியாகம் செய்த பரம்பரை நேரு—இந்திரா—ராஜீவினுடையது; இது தான் பாசிச ராஜீவ் கும்பலின்இன்றைய பிரதான பிரச்சார ஆயுதம். இந்த ஆயுதத்தின் கூர்முனையை முறிக்கும் ஆதாரமாக ஆசாத்தின் நூல் அமைந்துவிட்டது; இதற்காகத்தான் பாசிசராஜீவ் கும்பல் அஞ்சி நடுங்குகிறது.

இந்துக்களுக்கு ஓர் இந்தியா; முஸ்லீம்களுக்கு ஒரு பாகிஸ்தான் என்று மதரீதியில் நாட்டைத்துண்டாடுவதைத் தீவிரமாக எதிர்த்தவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத். அவர் ஒரு முஸ்லீம் மத போதகர்—மௌலானாவாக இருந்தபோதும் இந்து—முஸ்லீம் மற்றும் தேச ஒருமைப்பாட்டைத் தமது இலட்சியமாக ஏற்றுவாதாடினார். அதே சமயம் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். ஏகாதிபத்தியக் காலனிய ஆட்சிக்கு எதிரான உறுதியான விடுதலைப் போரின் மூலமாகவும், காங்கிரசு—முஸ்லீம் லீக் தலைவர்களின் மதவெறி துரோகத்துக்கும் எதிரான சமரசமற்ற போராட்டத்தின் மூலமாகவும்தேசிய விடுதலை மற்றும் ஒருமைப்பாட்டைச் சாதிப்பதற்காக ஆசாத் நிற்கவில்லை. அவர்களிடம் சமரசம் செய்து கொண்டு, சாதுரியமாகவும் விட்டுக் கொடுத்தும் தந்திரமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்றுதான் வாதாடுகிறார்.



அதிகார மாற்றத்துக்கான பேரங்கள் மும்முரமாக நடந்த காலனிய ஆட்சியின் கடைசி ஆண்டுகள்—தேசத்துரோகிகள்



படிப்பகம்

www.padippakam.com


அதே சமயம் ஆசாத் தமது நூலில் சில வரலாற்றுத் தகவல்களைத் தருகிறார். காங்கிரசுத் தலைவர்கள் குறிப்பாக நேரு, பட்டேல், கிருஷ்ணமேனன் ஆகியோர் தாமேஅறிவித்துக்கொண்ட கொள்கைகளுக்கு எப்படித் துரோகம் செய்தனர்; நாட்டைத் துண்டாடுவதில் எப்படி ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையாக இருந்தனர் என்கிற முடிவுக்கு அவை வரவைக்கின்றன.

முஸ்லீம் லீகின் தனிநாடு கோரிக்கை, காங்கிரசு தலைமையின் இந்து மதவெறி காரணமாக காங்கிரசு—முஸ்லீம் லீக் பிளவைக் காரணங்காட்டி, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சிறிது காலம் பிரிட்டிஷ் காலனிய ஆட்சியை நீட்டித்து வந்தது. ஆனாலும் கடற்படை எழுச்சி உட்பட பல போராட்டங்கள் வெடித்தன. இந்தியத் துணைக் கண்டமே கொந்தளித்து எழுந்தது. அதற்கு மேலும் காலனிய ஆட்சியை நீட்டிக்க முடியாத நெருக்கடி உருவானது.

பெயரளவிலான சுதந்திரம் வழங்கி அதிகார மாற்றம் செய்வதற்கான பேரங்கள் துவங்கின. அப்போது இந்தியா வந்திருந்த பிரிட்டிஷ் மந்திரிசபைத் தூதுக்குழு—காங்கிரசு முஸ்லீம்லீக் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. இரண்டுகட்சியினரும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் “மந்திரிசபை தூதுக் குழுத் திட்டம்” ஒன்றை அறிவித்தது.

அதுவரை தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்தமுஸ்லீம் லீக், அப்போது கிடைக்க இருந்த அதிகாரமும் பறிபோய் விடும் என்றஞ்சி, தூதுக் குழுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. அப்போது ஆசாத் காங்கிரசுத் தலைவராக இருந்தார். தூதுக்குழுத் திட்டத்தைக் காங்கிரசு ஏற்றுக் கொண்டு, இடைக்கால அரசில் பங்கேற்கவும், “தூதுக்குழுத் திட்டப்படி” அரசியல் நிர்ணய சட்டம் இயற்றவும் ஒப்புக் கொண்டது. இதை அகில இந்திய காங்கிரசு கமிட்டித் தீர்மானமாக நிறைவேற்றியது. அதன் மூலம் நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்க முடியும் என்று ஆசாத் நம்பினார்.

அதன் பிறகு, ஜவகர்லால் நேரு காங்கிரசின் தலைவரானார். 1946 ஜூலை 10ந்தேதி பம்பாயில் அவர் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் பேசும்போது காங்கிரசின் தீர்மானம் குறித்து புது வியாக்கியானம் கொடுத்தார். மந்திரிசபைத் தூதுக்குழுத் திட்டத்தைகாங்கிரசு அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டதா என்று மீண்டும் மீண்டும் பத்திரிக்கையாளர்கள் கேட்டனர். “அரசியல்நிர்ணய சபையிலே பங்கேற்பது என்று மட்டுமே முடிவு செய்திருக்கிறது. எது மிகச் சிறந்தது என்று நினைக்கிறதோ அதன்படி தூதுக்குழுத் திட்டத்தை மாற்றவோ, திருததிக் கொள்ளவோ காங்கிரசுக்கு முழுச் சுதந்திரம் இருப்பதாகக் கருதுகிறது என்று ஆணித்தரமாக நேரு அறிவித்தார்” (ஆசாத் நூல்).



தூதுக்குழுத் திட்டத்தைக் காங்கிரசு ஏற்றுக் கொண்டுவிட்டது என்கிற அடிப்படையிலேதான் முஸ்லீம் லீக்கும் ஏற்றுக் கொண்டிருந்தது. தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு, தூதுக்குழுத் திட்டப்படி இடைக்கால அரசிலும், அரசியல் நிர்ணயசபையிலும் பங்கேற்று புதிய அரசியல் நிர்ணய சட்டம் இயற்றப்படுவதை முஸ்லீம் லீகினுள் கடும் எதிர்ப்பு இருந்தபோதும் ஜின்னா ஏற்றுக் கொண்டிருந்தார். “அரசியல் நிர்ணய சபையில் தனக்குள்ள பெரும்பான்மையைக் கொண்டு தூதுக் குழுத்திட்டத்தை மாற்றிக் கொள்ளும் என்று இப்போது காங்கிரசு தலைவர் நேரு அறிவித்துவிட்டார். இதன் பொருள், பெரும்பான்மையின் தயவிலேயே சிறுபான்மையினர் வைக்கப்படுவர் என்றானது. தூதுக்குழுத் திட்டத்தைக் காங்கிரசு நிராகரித்துவிட்டது என்பதையே நேருவின் அறிவிப்பு குறிக்கிறது என்றார் ஜின்னா. எனவே மீண்டும் முஸ்லீம் லீக் கவுன்சிலைக் கூட்டி தானும் தூதுக்குழுத் திட்டத்தை நிராகரிப்பதாக அறிவித்தார். பாகிஸ்தான்—தனி நாட்டை அடைவதற்காக நேரடி நடவடிக்கையில் இறங்கப் போவதாக முஸ்லீம் லீக் முடிவு செய்தது.”

“மிகவும் வேதனை அடைந்த நான் உடனடியாக காங்கிரசு காரியக் கமிட்டியைக் கூட்டும்படி கோரினேன். நேரு முதலில் மறுத்தார்; நான் வலியுறுத்தவே, ஒப்பு கொண்டார். நிலைமையைச் சமாளிக்க வேண்டுமானால், ‘பம்பாய் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் நேரு அறிவித்தவை அவரது தனிப்பட்ட கருத்து; அகில இந்தியக் காங்கிரசு கமிட்டித் தீர்மானம் தான் காங்கிரசின் இறுதி முடிவு. அதை காங்கிரசு தலைவர் உட்பட யாரும் மாற்ற முடியாது’ என்று தெளிவுபடுத்தி விடும்படி கோரினேன். அவ்வாறு செய்தால் கட்சிக்கும் தனிப்பட்ட முறையில் தனக்கும் தர்மசங்கடமாகப் போய் விடும் என்று நேரு வாதாடினார்” (ஆசாத் நூல்)

கட்சித் தீர்மானத்தை மீறி தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டதோடு, சுயகௌரவத்தைக் காரணம் காட்டி வாதாடினார் நேரு; அதன் விளைவாக நாட்டைக் கூறுபோடுவதற்கான ஆயுதத்தை முஸ்லீம் லீகுக்கு கொடுத்தார் என்பது ஆசாத்தின் குற்றச்சாட்டாகும். இதன் விளைவுகள் பற்றிப் பின்வருமாறு ஆசாத் எழுதியுள்ளார். மதக் கலவரங்களும் படுகொலைகளும் நடந்த “ஆக 16, 1946 கல்கத்தாவுக்குமட்டுமல்ல; இந்தியா முழுவதுக்குமே இருண்ட நாள். காங்கிரசுக்கும்முஸ்லிம் லீக்குக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, சமாதான பூர்வமான தீர்வை எதிர்பார்க்கவே முடியாது என்பதாக சம்பவங்கள் மாறிப் போயின. இது இந்திய வரலாற்

## சுயவிமர்சனம்

### தவறுக்கு வருந்துகிறோம்

புதிய ஜனநாயகம் 1—15 மார்ச்சு '88 இதழில், “புதைக்கப்படும் உண்மைகள் பூதமாகக் கிளம்பும்” என்கிற கட்டுரையில் அபுல்கலாம் ஆசாத் நிறுத்தி வைத்திருந்த முப்பது பக்கங்கள் மீதான வழக்கு பற்றி எழுதியிருந்தோம். அதில் “ஹுமாயுன் கபீரின் மகள் லைலா கபீரும், மௌலானா ஆசாத்தின் தங்கை வழி பேத்தியும்காங். பொதுச்செயலாளராகவும் உள்ள நஜிமா ஹெப்துல்லாவும் சேர்ந்து அந்த முப்பது பக்கங்களுக்கு உரிமை கோரி வழக்குப் போட்டுள்ளனர்” என்று எழுதியிருந்தோம். நஜிமாவுடன் சேர்ந்து உரிமை கோரி லைலா கபீர் வழக்குப் போடவில்லை. நஜிமாதான் அதன் வாரிசு உரிமை கோரி வழக்காடி, வெளிவராமல் தடுத்தவர். அவருக்கு எதிராக, அந்த முப்பது பக்கங்களை உடனடியாக வெளியிடும்படித்தான் லைலாகபீர் வழக்காடினார். கவனக் குறைவினால் தவறான செய்தி வெளியிட்டதற்காக வருந்துகிறோம்.

—ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

றுல் மிகவும் துன்பகரமானவைகளில் ஒன்றாகும்; இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டதற்குரிய பெரும்பகுதியான பொறுப்பு ஜவகர்லால் நேருவாகும் என்பதை ஆழமான வருத்தத்தோடு நான் கூறியாக வேண்டும்'' (ஆசாத் நூல்). தேசிய நலனுக்கு நேரு இப்படி மிகப் பெரிய அளவு தீங்கு விளைவிப்பது முதல் தடவை அல்ல. 1937இல் உத்திரப் பிரதேச மந்திரி சபையில் முஸ்லீம் லீக்குக்கு இரண்டு பதவிகள் கொடுக்க மறுத்ததன் மூலம், அதிலுள்ள பிரிவினைவாதிகள் கை ஓங்குவதற்கு வாய்ப்பை உருவாக்கினார் நேரு என்பதும் ஆசாத்தின் குற்றச்சாட்டு.

. அது மட்டுமல்ல. 1946—47 ஆகிய இறுதி ஆண்டில் நாடு பிளவுபடுவதை நேரடியாகவே நேரு ஆதரித்தார். அதற்குக் காரணம், நேரு இரகசிய உறவு வைத்திருந்த மவுண்ட்பேட்டனின் மனைவி எட்வினா; நேருவுக்கு முகஸ்துதி பாடி, விசுவாசியாக இருந்து பதவிகள் அனுபவித்த கிருஷ்ணமேனன் ஆகியோரது போதனைதான் என்று ஆசாத் கூறுகிறார்.

''(பிரிவினை குறித்து நேருவின் கருத்தோட்டத்தில்) மாறுதல் எற்பட்டதற்கான காரணம் லேடி எட்வினா மவுண்ட் பேட்டனின் தனிப்பட்ட உறவு என்று கருதுகிறேன்.'' ''கிருஷ்ணமேனன் நேர்மையற்ற நபர் என்று காந்தியும் பட்டேலும் சந்தேகித்தனர். அது சரியென்று பின்னாளில் தெரிந்தது.பொதுநிதியைக் கண்டபடி செலவு செய்தார். கம்யூனிச மனப்போக்குடையவராக இருந்த கிருஷ்ணமேனன், மவுண்ட்பேட்டனின் தயவால் பதவிகிடைக்கும் என்று தெரிந்தவுடன் பிரிட்டிஷ் ஆதரவாளரானார்.இந்தியாவைப் பிளவு படுத்தும் தனது திட்டத்துக்கு நேருவை உடன்பட வைப்பதில் மேனன் பயன்படுவார் என்று மவுண்ட்பேட்டனும் கருதினார். கிருஷ்ணனமேனின் முகஸ்துதி, விசுவாசத்துக்குப் பலியான நேருவை பிரிவினையை ஏற்க வைப்பதில்மேனனுக்கு பங்குண்டு. அதற்காக மேனனுக்கு லண்டன் தூதரகப் பதவி கொடுக்கும்படி மவுண்ட் பேட்டன் சிபாரிசு செய்தார்'' (ஆசாத் நூல்)

**இப்படியாக, நாட்டின்** ஒருமைப்பாடு ஐக்கியத்துக்காக பாடுபட்டதல்ல. நாட்டின் பிரிவினைக்குத் துரோகத்தனம் செய்ததுதான் நேரு பரம்பரை என்பதற்கான ஆதாரங்கள் தருகின்றன, மௌலானா அபுல் கலாம்—ஆசாத்தின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 30 பக்கங்கள். முத்திரை இட்டு வைக்கப்பட்டிருந்த அதை உடைத்து, திருத்திவிட்டது பாசிச ராஜீவ் கும்பல் என்கிற குற்றச் சாட்டை அது மறுக்கிறது. ஆனால் ஆசாத்தினுடைய நூல் முழுமையாக வெளிவரும் அதே சமயம் அதற்குப் பதில் கொடுக்கும் விதமாக வேறுஒரு நூல் வெளியிட பாசிச ராஜீவ் கும்பல் ஏற்பாடு செய்துவிட்டது.

பாசிச ராஜீவ் கும்பலின் கூலி எழுத்தாளர், கல்கத்தா—'தி டெலிகிராஃப்' நாளேட்டின் ஆசிரியர் எம் ஜே அக்பர் 350 ரூபாய் விலையில், 591 பக்க அளவு பளப்பளப்பாக நேரு நூற்றாண்டு விழாவை ஒட்டி ''நேரு: இந்தியாவை உருவாக்குவது'' என்ற நூலை வெளியிடுகிறார். அதிலே, நேரு பிரிவினையை ஆதரித்ததை நியாயப் படுத்துகிறார். நேருவின் காமக் களிவெறியாட்டங்களை கதாநாயகனுக்குரிய சூரத்தனமாகப்



அபுல் கலாம் ஆசாத்

கிறார். நேருவின் அரசியல்—பொருளாதார கொள்கைகள் தோல்விகண்டு, அம்பலப்பட்டு கேவலமாக மாண்டதை வீரதீரதியாக வெற்றி வாழ்க்கையாக சித்தரிக்கிறார்.

நேருவுக்கு வெகு காலம் முன்பாகவே வல்லபாய் பட்டேல் நாடு பிளவு படுவதை ஏற்றுக் கொண்டு விட்டார். எனவே நேரு அதை ஆதரித்ததில் தவறு இல்லை என்பது அக்பரின் ஒருவாதம். எட்வினாவுடன்இருந்த உறவுதான் அதற்குக் காரணம் என்றால் பட்டேலும் எட்வினாவும் உறவு வைத்திருந்தார்களா என்பது அக்பரின் குதர்க்கமான கேள்வி. பட்டேல்—ஒரு இந்து மத வெறியர். ''முஸ்லீம் லீக்கோடு இணைந்து பணியாற்ற முடியாது. இந்தியாவின் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்தாலும் பரவாயில்லை, முஸ்லீம்-லீக் போனால்போதும் என்று பட்டேல் கருதினார். எனவே மவுண்ட் பேட்டன் வருவதற்கு முன்பே பிரிவினையை அவர் ஆதரித்தார். இந்தியப் பிரிவினைக்கு வித்திட்டவர் பட்டேல் என்று கூறுவது கூட தவறாகாது'' என்கிறார் ஆசாத்.

ஆனால் இந்து — முஸ்லீம் ஒற்றுமை, மதச்சார்பின்மை, தேச ஒற்றுமை பற்றிப் பீற்றிக் கொள்ளும் பரம்பரையின் முன்னோடி பிரிவினையை ஆதரித்தது ஏன் என்பதுதான் கேள்வி.

இதற்கு வேறு ஒரு பதில் தயாரித்திருக்கிறது கூலிப்பிரச்சாரக் கும்பல். ''அப்போது நிலைமை குழப்பமாக இருந்தது. என்ன நடக்கிறது, என்ன நடக்கும் என்றே தெரியவில்லை. பேராசைக்காரர்கள் தலைவிரித்தாடினர். ஜின்னா பாகிஸ்தானையும், சுராவாடி வங்காளத்தையும், அகாலிகள் காலிஸ்தானையும், காஷ்மீர், ஜோத்பூர் போன்றவற்றை ராஜபுத்திரர்களும், போபால், ஐதராபாத் போன்றவற்றை நாவப்புகளும் தனித்தனி நாடுகளாகத் துண்டித்து கூறு போட்டுக்கொள்ளத் துடித்தனர். நாட்டைப் பல கூறுகளாக்கும் நகல் திட்டம் ஒன்றைத்தயாரித்து மந்திரிசபை அங்கீகாரத்துக்கு அனுப்பும்முன்வைஸராய் மவுண்ட் பேட்டன் நேருவிடம் காட்டினார். ஆத்திரமும், வேதனையும் அடைந்த நேரு,மவுண்ட் பேட்டனுக்கு அதிர்ச்சியூட்டும் கடிதம் ஒன்றை எழுதினார். அவர்களுக்கு இடையிலான தனிச்சிறப்பான உறவு காரணமாக நாடு சிதைவுறுவது தடுக்கப்பட்டது. இரு கூறாக மட்டும் பிளவு பட்டது'' என்கிறார் ராஜீவின் கூலி எழுத்தாளர் அக்பர்.

நேருவின் துரோகத்தனத்தை மூடிமறைக்க முயலும் போதே அக்பர் சில தகவல்களைத் தருகிறார். அவை நேருவுக்குஎதிரான ஆசாத்தின் குற்றச்சாட்டுகளை மேலும் நிரூபிப்பதாக உள்ளன. ஆசாத் காங்கிரசுத் தலைவராகவும், வேவல் பிரபு வைஸ்ராயாகவும் இருந்தபோது பிரிவினை இல்லாமல் அதிகார மாற்றம் செய்துதரும் தூதுக்குழுத் திட்டத்தை காங்கிரசு—முஸ்லீம் லீக் தலைமைகள் ஏற்றிருந்தன. 1946, ஏப்ரலில் நேரு காங்கிரசு தலைவரானார். மவுண்ட் பேட்டன் வைஸ்ராயாகப் பெறுப்பேற்று இந்தியா வந்தார். ஜூலை 10 பம்பாய் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் காங்கிரசு நிறைவேற்றிய தீர்மானத்துக்கு எதிராக, அதை நிராகரிப்பதாக நேரு அறிவித்தார். இடையிலிருந்த இரண்டு



படிப்பகம்

www.padippakam.com


பத்மஜா — நேரு


மவுண்ட் பேட்டன்—நேரு—எட்வினா

# "ஒழுக்க நெறி அற்றவர் நேரு"!

உத்தமர், ஒழுக்க சீலர் ஜவகர்லால் நேரு என்பது அரசு, அதிகாரபூர்வப் பிரச்சாரம். ஆனால் நேரு ஒரு பெண் பித்தராக, இரகசிய வாழ்க்கை வாழ்ந்தது பற்றி அடுத்தடுத்துசில நூல்கள் வந்து விட்டன. நேரு—எட்வினாவின் இரகசிய உறவை நேரில் பார்த்ததாக டாட்டா நிறுவன நிர்வாக முதலாளி ரூசி மோடி எழுதினார். மவுண்ட் பேட்டனுடைய அந்தரங்க செயலாளராக இருந்து, பிறகு அவருடைய அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாறை எழுதியவருமான ஃபிலிப் ஜெய்க்லர், அந்நூலில் நேரு—எட்வினா உறவு பற்றி வெளிப்படையாகவே எழுதியுள்ளார். நேருவின் அந்தரங்க செயலாளர் எம்.ஓ. மத்தாய், நேரு பல பெண்களுடன் உறவு வைத்திருந்ததுபற்றி நூல்கள் எழுதியபோது, காங்கிரசுத் தலைவர்கள் அவரை ஏசினர்.

இப்படி நேருவின் உண்மை முகம் வெட்ட வெளிச்சமானபிறகு நேருவின் பெண்பித்தையே ஒரு கதாநாயகனுக்குரிய சூரத்தனமாக இப்போது எம்.ஜே. அக்பர் தனது நூலில் எழுதியுள்ளார். "கமலா நேருவின் சாவுக்குப்பிறகு நிச்சயமாக நேரு பல பெண்களுடன் நெருக்கமான நட்புறவு வைத்திருந்தார். குறிப்பாக பத்மஜாவுக்கு (சரோஜினி நாயுடுவின் மகளும், பின்னாளில் நேருவால் கவர்னர் பதவிபெற்றவரும் ஆவார்.) அவர் எழுதிய காதல் கடிதங்கள் மனதைத் தொடக்கூடியவை; நேர்மையான உணர்ச்சியுடையவை" என்று கூறும் அக்பர் அந்தக் கடிதங்களின் சில பகுதிகளை வெளியிட்டுள்ளார். ஐம்பது வயதிலும் இருபது வயது இளைஞர்களாக அவர்கள் பழகியது—எழுதியது குறித்து அக்பர் உருகிப் போகிறார்.

"பாலுறவு விவகாரத்தில் நேரு எவ்வித ஒழுக்க நெறியுமற்றவர் என்று தனது சொந்த வாழ்க்கை வரலாற்றிலேயேஎழுதிவிட்டார்; இந்த விவகாரத்தில் உள்ளொன்றும் வெளியொன்றும் வைத்து நடப்பவர் அல்ல. பாலுறவு கொள்வது பாவம் என்கிற கண்ணோட்டம் அவருக்குக் கிடையாது. அது பற்றி காந்தியைப்போல எதிர்நிலை கொண்டவரல்ல. இதை அறிந்தே காந்தி தனது வாரிசாக நேருவை ஏற்றுக் கொண்டார். நேருவின் பாலுறவு விவகாரங்களை அவருக்கு எதிராகப் பயன்படுத்த எதிரிகள் முயன்றனர். ஆனால் மக்கள் அதைப் பொருட்டாகக் கருதாமல் அடுத்தடுத்த தேர்தல்களில் அவரை வெற்றிபெற வைத்தனர்" என்கிறார் அக்பர்.

கோமான் வீட்டுக் கழிப்பறையும் மணக்கும் என்பதுதான் இந்த கேடு கெட்டவர்களின் ஒழுக்க நெறியாக உள்ளது.

மாதம் நேருவும் மவுண்டபேட்டன் தம்பதியினரும் கூடிக் குலாவிய தகவல்களை அக்பர் தருகிறார். அப்போதுதான் நாட்டை பல கூறுகளாக சிதைக்கும் நகலை மவுண்ட் பேட்டன் நேருவுக்குக் காட்டியதாக, அவர்களுக்கிடையிலான உறவு பற்றி பின் வரும் அக்பரின் வாசகங்களே அம்பலப் படுத்துகின்றன.

"மே முதல் வாரத்தில் இன்னொரு கடும் வெப்பமான கோடை வந்தது. சிம்லா மலைகளுக்கு ஒரு குறுகிய காலம் பயணம் போனார்கள் மவுண்ட் பேட்டன் தம்பதியினர். மே 8ந்தேதிஅவர்களுடைய தனிப்பட்ட விருந்தினராக நேருவும், இந்திராவும், கிருஷ்ண மேனனும் போய்ச் சேர்ந்தனர். வைஸ்ராயினுடைய மாளிகையில் அவர்கள் தங்கினர்." (அக்பரின் நூல்)

"மே 10ந் தேதி மாலை. விருந்து முடிந்ததும் மதுவருந்திக் கொண்டே அளவலாவுவதற்காக மவுண்ட் பேட்டனும், நேருவும் வைஸ்ராயின் படிப்பறையில் ஓய்வாக அமர்ந்தனர். பிரிட்டிஷ் கலாச்சார மரபுப்படி அவ்வாறு செய்வது வழக்கம்தான். அவ்விருவரும் தனியே இருந்தனர். அப்போது "பரிசீலனையில்" உள்ள உள்ள இரகசியத் திட்டத்தை நேருவுக்குக் காட்டுவது என்று முடிவு செய்திருப்பதாக மவுண்ட்பேட்டன் சொன்னார். விதிமுறைப்படி அவர் அதைக் காட்டியிருக்கக்கூடாது. ஜின்னாவிடம் காட்டாதபோது அதை நேருவுக்கு மட்டும் காட்டுவது 'நம்பிக்கைத் துரோகம்' என்று அதிகாரிகள் பிறகு சொன்னார்கள். ஆனால் நன்நம்பிக்கையுடைய ஒரு மனிதரிடம் காட்டும் நேர்மையான பாங்கு, பாவம்தான் என்பது வெளிப்படை. 'நட்புமுறை நடவடிக்கைதான் இது! தனது சகாக்களிடம் இதுபற்றித் தெரிவிக்கக்கூடாது' என்கிற அடிப்படையில் நகல் திட்டத்தை நேருவிடம்காட்டினார்"என்கிறார் அக்பர்.

அத்திட்டத்தின்படி நாடு பல கூறுகளாக சிதறுவதைத் தனது சொந்த செல்வாக்கைக் கொண்டு நேரு தடுத்தார். அதற்காகவே நாட்டுப்பிரிவினையை ஏற்றார் என்பது அக்பரின் வாதம். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மக்களைச் சார்ந்து நின்று தேசிய விடுதலைப் பேரியக்கத்தை நடத்தியிருப்பார்களேயானால் மதவாத, பிளவுவாத சக்திகளைக் கண்டு அஞ்சியிருக்க வேண்டியதில்லை. மதவெறிக் கலவரம், பெருமளவு படுகொலைகளுக்கு மத்தியில் நாடு துண்டாப்படுவதைத் தடுத்திருக்க முடியும். அதற்குப் பதிலாக ஏகாதிபத்திய சேவகம், அரண்மனை—விருந்து மாளிகைபேரங்கள், காமக் களிவெறியாட்ட அரசியல் நடத்தினார் நேரு என்பதையே அக்பரின் வாதங்கள் நிருபிக்கின்றன. கேடுகெட்ட நடவடிக்கைகளின் காரணமாக நாட்டுப். பிரிவினை என்கிற தேசத்துரோகத்தை நேரு அரங்கேற்றினார். தேசிய ஒருமைப்பாடு—ஐக்கியத்தைத் தமது சுய நலனுக்காக அடகுவைத்தார்.

அந்தத் துரோகப் பரம்பரையின் தகுதியான வாரிசுகள் என்பதைத்தான்இந்திராவும், ராஜீவும் காட்டியுள்ளனர். வகுப்புவாத, பிளவுவாத சக்திகளுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு சாதி, மதக் கலவரங்களையும், மக்கள் திரள் படுகொலைகளையும் தூண்டுகின்றனர். அதே சமயம் அவற்றுக்கெதிராக தேசிய ஒருமைப்பாடு—ஐக்கியத்துக்காகப் பாடுபடும் — தியாகம் செய்யும் பரம்பரையாகக் காட்டி வேஷம் போடுகின்றனர்.

● ஆர். கே.

படிப்பகம்

www.padippakam.com

# பற்றி எரிகிறது சாதிக்கலவரம்

# குளிர் காய்கிறது காங்கிரசு

'குழந்தையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிற' கதையாக இன்று காங்கிரசு கபட நாடகமாடுகிறது. ஒரு புறம் வன்னியர் பிரச்சினையை ஊதிப் பெருக்க வைத்து கலவரத்தை அரங்கேற்றுகிறது. மறுபுறம் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நண்பனாக அரவணைக்கிறது. ஒரே கல்லில் இரு மாங்காய், வன்னியர் ஓட்டு, அரிசன ஓட்டு.

வன்னியர்—அரிசன மோதல் ஏற்படாதபடி தடுக்க ஒப்பந்தம் போட்டு, காங்கிரசு கவர்னர் அரசின் செலவில் ராமதாசுக்கும் இளைய பெருமாளுக்கும் விளம்பரம் செய்த அடுத்த 24 மணி நேரத்திலேயே கடலூர் பழைய நகரின் அருகிலுள்ள சுத்துக்குளம், மணக்குப்பம், சான்றோர் பாளையம், புருகிஸ் பேட்டை போன்ற இடங்களில் கலவரம் வெடித்தது.

இதிலே பெரிதும் பாதிக்கப்பட்டது மணக்குப்பம் காலனி தான். அப்பகுதி வன்னியர்கள் ராமாபுரம் மற்றும் பல பகுதியிலிருக்கும் வன்னியர்களைத் திரட்டி வந்து திட்டமிட்டு மணக்குப்பத்து தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி அவர்களின் 300க்கும் மேற்பட்ட குடிசைகளைக் கொளுத்தியுள்ளனர்.

அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சுமை தூக்கி வயிற்றைக் கழுவுபவர்கள். எந்தக் கை 100 கிலோ, 102 கிலோ சர்க்கரை மூட்டைகளை அனாயசமாகத் தூக்கி தலையில் தாங்குமோ அந்தக் கைகள் வன்னியரின் சுலுக்கி, அருவாள் போன்ற மாடு வெட்டும் இரும்புக் கருவிகளால் ஈவிரக்கமின்றி வெட்டப்பட்டது இனி **அவர்களின் எதிர் காலம்...?**

மணக்குப்பத்து தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒண்ட இடமின்றி கடலூர் மருத்துவமனை வாசலிலும் எதிரேயுள்ள மாரியம்மன் கோயிலிலும் தஞ்சமடைந்துள்ளனர். அவ்வப்போது கிராமத்திலிருந்து குற்றுயிராய் வண்டிகளில் கொண்டு வருபவர்களை அவர்களே சுமந்து சென்றனர். நமது தோழர் சென்றபோது 'எங்களுக்கு வீடு இல்லை, ஊரே இல்லை. இந்த இடத்தைவிட்டு இனி நாங்கள் நகரப் போவதில்லை' என வேதனையுடன் கூறினர்.

செப்டம்பர் 20ம் தேதி, காலனி சுமை கூலித் தொழிலாளர்கள் வேலை முடிந்து சிகரெட் பிடித்தபடி சுடுகாட்டு வழியே மணக்குப்பம் வந்தனர். அது ஒன்று தான்பாதையும்கூட. அங்கு நின்றிருந்த மூன்று வன்னியர்கள் 'என்னடா கொழுப்பா? எங்க எதிரிலேயே சிகரெட் பிடிக்கிறீர்கள்?' என திமிராகக் கேட்டு பின் கொடூரமாக, மிருகத்தனமான முறையில் வெறியாட்டம் போட ஆரம்பித்தனர்.

18-10-88 அன்று வேலைக்குப் போய்திரும்பிக் கொண்டிருந்த நடராஜன், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரையும் வன்னிய இளைஞர்கள் கூட்டாக சேர்ந்து அடித்து நொறுக்கினர். அதைத் தொடர்ந்து 19-10-88 அன்று காலை ஊர் பஞ்சாயத்துகூடி வன்னியருக்கு அபராதம் விதித்தது. ஆனால் பிரச்சினை தீராமல் சாதி வெறி நீறு பூத்த நெருப்பாகவே இருந்தது.

19.10.88 அன்று மாலை குடி போதையிலிருந்த வன்னியர் ஒருவர் அவ்வழியே சென்ற தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்து கேவலமாக ஏசத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து வன்னியாகள் அவ்வழியே சென்ற அருணாசலம் என்ற தாழ்த்தப்பட்டவரை தாக்கி



உழைக்கும் கரங்கள் உருகுலைந்து போனதே! சாதிய கலவரத்தின் கொடுமை: வெட்டுகாயம் பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்கள்.

வன்னியர்கள் இரும்பு குழாய்களுடன் கூட்டமாக வந்து தனியாக வந்த தாழ்த்தப்பட்ட மக்களை அடித்து நொறுக்கினர். போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த சம்பவத்துக்குப் பின் அக்டோபர் 2ம் தேதி வன்னியர் தலைவர் ராமதாஸ் கடலூரின் பல பகுதிகளில் கொடியேற்றினார். சுத்துக்குளம், மணக்குப்பம் பகுதிகளிலும் கொடியேற்றி அங்கு விஷவித்துக்களை விதைத்துச் சென்றார்.

ராமதாஸ் வந்து சென்றது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போலானது. வன்னியர்கள் சாதி வெறி தலைக்கேற இன்னும்

னர். மீண்டும் இது பற்றி ஊர்ப் பஞ்சாயத்திடம் முறையிடச் சென்ற தாழ்த்தப்பட்ட மக்களை வன்னியர்கள் சுற்றி வளைத்து அடித்து நொறுக்கினர். பின்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் போலீசிடம் முறையிட்ட பிறகு 6 போலீசார் மட்டும் பாதுகாப்புக்குச் சென்றனர். ஆனால் அவர்களோ வன்னியர்களிடம் விருந்துண்டு விட்டு விசுவாசமாக வாலை ஆட்டினர்.

பின்னர் அக்டோபர் 20, 21ம் தேதிகளில் இந்த மோதல்களையே பெரிய கலவரமாக்கி திட்டமிட்ட படுகொலைகளை வன்னியர்சங்கம் மீண்டும் அரங்கேற்றியது. பல தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வெட்டப்பட்டு புதரில் வீசப்பட்டனர். காசி என்ற தாழ்த்தப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

இளைஞர் உடல் வயலில் கண்டெடுக்கப்பட்டது. மற்றொரு தாழ்த்தப்பட்ட இளைஞர் உப்பணாற்றில் மூழ்கடிக்கப்பட்டார். பத்திரிக்கைகள் பொய்செய்திகளை போலீஸ் அறிக்கைகளை வாந்தி எடுத்துள்ளன. கலவரத்தை கட்டுப்படுத்த என வந்த போலீசு துப்பாக்கி சூடு நடத்தி 10 வயது சிறுமி சாந்தியையும், சேகரையும் (25 வயது) கொலை செய்தது.

20.10.88 அன்று காலை ஊர்ப் பிரசிடெண்ட் அதிமுக கட்சியைச் சேர்ந்தவர்—அவரும் ஒரு வன்னியர்—காலனிக்குள் வந்து இனிமேல் தகராறு எதுவும் நடக்காது என்று சொல்லிவிட்டுப் போனார். அதைத் தொடர்ந்து



சாதிவெறி கண்ணை மறைத்தது; கத்தியால் கிழிக்கப்பட்டவன்னிய முதியவர் பெருமாள்.



சாதிவெறி மனிதனை மிருகமாக்கியது. பெண்கள் பச்சிளங் குழந்தைகள் என்றுகூட பார்க்கவில்லை. வெட்டு காயங்களுடன் தாழ்த்தப்பட்ட பெண்கள் சிறுவர்கள்.

அந்த மக்களில் சிலர் வெளியே வந்தார்கள். போலீசின் எதிரிலேயே அவர்கள் வன்னியர்களால் தாக்கப்பட்டனர். போலீசிடம் பாதிக்கப்பட்டவர்கள் சொன்னபோது போலீசின் பதில் விட்டேத்தியாக இருந்தது. 'ஊருக்குதான் நாங்கள் காவலே தவிர, தகராறுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை' என்றனர்.

வன்னியர்கள் புதூர், ராமாபுரம், சான்றோர் பாளையம், வழிசோதனைப் பாளையம், பச்சையாங்குப்பம், கின்னாரப்பேட்டை, பொன்னங்குப்பம்; சுத்துக்குளம் போன்ற சுற்றுப்புற கிராமங்களிலிருந்து திட்டமிட்ட ரீதியில் டிராக்டர்களின் மூலம் சுமார் 2000 பேரைத்திரட்டிவந்து கலவரத்தை நடத்தினர். வன்னியர்கள் ஆயுதங்களுடன்திரள்வதை முன்கூட்டியே தடுத்திருக்க முடியும். ஆனால் போலீஸ் அதைச் செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டதுடன், தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகள் எரிந்தபோதும் கைகட்டி வேடிக்கை பார்த்து ரசித்தது.

இக்கலவரத்தில் 200க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். ஒரு தாயின் கைக்குழந்தையைப் பிடுங்கி வன்னிய வெறியர்கள் முட்புதரில் வீசி பூ உடலை புண்ணுடலாக மாற்றினர். தாழ்த்தப்பட்ட பெண் ஒருவரின் பெண்ணுறுப்பில் எரியும் கொள்ளியை வைத்துள்ளனர்.

மருத்துவமனையில் 10க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அபாயகட்டத்திலுள்ளனர். மதுரை என்ற வாலிபர் தீவிர சிகிச்சைக்கு சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளார். 100க்கும் மேற்பட்டவர்கள் எவ்வித படுக்கை வசதியுமின்றி தரையில் கிடத்தப்பட்டுள்ளனர்.

இக்கலவரத்தில் வன்னியா தரப்பிலும் பத்து வயது சிறுமி சாந்தி துப்பாக்கி சூட்டில் இறந்துவிட்டாள். பெருமாள் (வயது 52) என்ற அப்பாவி வன்னியர் வயிற்றில் காயம்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

நமது தோழர்கள் மருத்துவமனை சென்ற ஒருமணி நேரத்தில் ஒரு டாக்டர்கூட வந்து பார்க்கவில்லை. போதிய மருந்துகள் கூட தரவில்லை.

இத்தனை இழப்புகளிலிருந்தும், அரசின் பொய்ச் செய்திகளை மறுத்து எந்த அறிக்கையும் விடாமல் ஜெயசீலன் போன்ற தாழ்த்தப்பட்டோரின் தலைவர்கள் மௌனம் சாதிப்பது பெருத்த சந்தேகத்தை எழுப்புகிறது.

தங்க இடமின்றி தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு மாற்று இடமோ உணவோ ஏற்பாடு செய்யாத கலெக்டர் சாரங்கி, கண் துடைப்புக்காக எரிந்த குடிசைகளை பார்த்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் அவரை பார்க்கச் சென்றபோது 'நடந்து முடிந்ததைப் பற்றி பேச வேண்டாம். நடக்க வேண்டியதைப் பரிசீலிப்போம்' என திமிராகப் பேசியுள்ளார்.

ராஜீவ் தமிழகம் வரும்போது உற்சாகத்தில் திளைக்கிறார். அவரது எண்ணம் ஈடேறுகிறது. வாங்குகிற காசுக்கு வஞ்சனையின்றி வேலை செய்கின்றன சாதிய சங்கங்கள். பலிகடாவாவதோ உழைக்கும் மக்கள்; ஏழை அரிஜனங்கள், ஏழை வன்னியர்கள். சாதியத் தலைவர்களின் சாதிய வெறிக்கும், ஓட்டுப்பொறுக்கிகளின் தேர்தல் வெறிக்கும் பலியாவது எவ்வளவு கேவலம், கொடுரம்...!

சாதிய அரசியல் இன்று விஷவிருட்சமாய் ஆழமாய் வேரூன்றி வருகிறது. காங்கிரசு கட்சி எப்படியும்ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திட வேண்டுமென இதற்கு உரமிட்டு வளர்க்கிறது. பிற ஓட்டுக் கட்சிகளும், சாதிய சங்கங்களும் இதற்கு உடந்தையாக செயல்பட்டு வருகின்றன. உழைக்கும் மக்கள் சாதிய வெறிக்கு பலியாவதால் செத்துமடிவதுதான் மிஞ்சும். இந்த ஓட்டுப்பொறுக்கிகளையும், சாதிய சங்கங்களையும் அடித்து நொறுக்கி உழைக்கும் நாமெல்லாம் ஒரே வர்க்கமாய் 'உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பருக்கே அதிகாரம்' எனக் கிளர்ந்தெழுந்து போராடுவது ஒன்றே நமக்கு விடிவைத் தரும். விரைந்து வாருங்கள் புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையிலே!

தகவல் தொகுப்பு:
மக்கள் கலை இலக்கியக் கழகம்
கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com





## புரட்சிப்பாதையில் முன்னேறுவோம்!

கம்பம் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பில், வானத்தைக்கீறி வைகறையைப் பறித்தெடுத்த நவம்பர் புரட்சி தினத்தில் மக்களுக்கு சரியான பார்வையில் புரட்சியைப் புரியவைக்கும் பிரச்சார இயக்கம் எடுக்கப்பட்டது! நவம்பர் புரட்சியின் வழியில் இந்திய புரட்சியை சாதிப்போம் என்று முழக்கங்கள் வடிக்கப்பட்ட கையெழுத்துப் போஸ்டர்கள் கம்பம் பகுதியின் பேருந்துகளில் ஒப்பப்பட்டது. வடிக்கப்பட்ட முழக்கங்கள்:

உலகை குலுக்கிய நவம்பர் புரட்சியின் நாயகர்களே! சுரண்டலை வீழ்த்திய வீரர்களே! உங்கள் பாதையே எங்கள் பாதை! தேர்தல் பாதையை தூக்கியெறிந்து நக்சல்பாரி ஆயுதப் போராட்ட அரசியல் பாதையில் அணி திரள்வோம்!

கொடுமைகளை கண்டு சகித்திருக்க கோழைகள் அல்ல வீரர்கள் நாம்! என்றுணர்த்திய நவம்பர் புரட்சியின் வீரர்களே! உங்கள் பாதையில் பயணம்தொடர்வோம்! இமயம் நாங்கள்; எதிரிக்கு பணியோம்! எதிரிகளை வீழ்த்த புரட்சி படை அமைப்போம்! எருது போல் மக்களுக்கு என்றும் உழைப்போம்!

—இச்சுவரொட்டிகளின் வாசகங்கள் பகுதி மக்களை ஈர்த்து, புரட்சிகர அரசியல் அமைப்பை அவர் அறிமுகப்படுத்தியது. □



## பீரங்கி திருடனுக்கு பாதுகாப்பு

### புரட்சியாளர்களுக்கு வலைவீச்சு

ஈழக் கொலைகாரன், பீரங்கித் திருடன் ராஜீவ், போடி நகருக்கு வருவதற்கு பத்து நாட்களுக்கு முன்பே விசாரணைஎன்ற பெயரில் வி.வி.மு. தோழர்களின் அன்றாட வேலைகளையும் கூட செய்யவிடாது தடுத்தன போலீசு கும்பல்.

எங்களின் பிரச்சாரக் குழுவில் எட்டே வயது நிரம்பிய இளம் தோழர்; சுமதி; அந்த சின்னஞ்சிறு குழந்தை பாடும் பாடல்கள், படிக்கின்ற பள்ளி போன்ற பல விவரங்களை பெற்றோர்களிடம் கேட்டு பேரேட்டில் பதிந்து பீதியூட்டினர்.

தே. மீனாட்சிபுரத்தில் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தோழர் மருதமுத்துவை கூட்டிச் சென்று தேவாரம் காவல் நிலையத்தில் விசாரித்தனர். ராஜீவை எதிர்த்து போஸ்டர் ஒட்டமாட்டேன் என எழுதித் தரும்படி மிரட்டினர். தோழர் உறுதியாக மறுக்கவே பின்னர் பேசாமல் விட்டுவிட்டனர்.

இதே போல லோயர் கேம்ப் என்ற சிற்றூரில் பத்து நாட்கள் முகாமிட்டனர். 'பயங்கரவாதி ஒருவனைத் தேடுகிறோம்', 'பெரியார் அணைக்கு குண்டு வைத்துள்ளதாக தகவல்', 'ராஜீவைக் கொல்ல சதி செய்யும் தீவிரவாதி! என பலவாறாகச் சொல்லி மக்களை பீதியடைய வைத்தனர். புதிய ஜனநாயக வாசகர்களிடம் 'இது தடைசெய்யப்பட்ட புத்தகம்' என மிரட்டிப் பார்த்து பலிக்காமற் போகவே அவர்களின் வயதான பெற்றோர்களிடம் சென்று உங்களையெல்லாம் சிறையிலடைப்போம் என பயமுறுத்தினர். நள்ளிரவு 1 மணிக்கு தோழர்கள் வீட்டுக் கதவைத் தட்டி விசாரித்தனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணியினர் போஸ்டர் ஒட்டினால்

## போலீசின் பீதி

24.10.88 அன்று விருத்தாசலம் பேருந்து நிலையத்தில் கடலூர் ம.க.இ.க. தோழர்கள் இருவர் 'போலீசைத் திருத்த முடியுமா? கட்டுரை வந்த புதிய ஜனநாயக இதழ்களை பேருந்தில் பேசி விற்பனை செய்தனர். மக்கள் மிக ஆர்வமுடன் பத்திரிக்கையை வாங்கி ஆதரவு தந்தனர்.

போலீசின் அக்கிரமங்கள் அம்பலமாவது கண்டு பொறுக்க முடியாத ஒரு போலீசு அதிகாரிகாலையில் தோழர்களை மிரட்டினான். தோழர்கள் அவனை மக்கள் மத்தியில் தெளிவாகவே அம்பலப்படுத்த, அவன் வாலைச்சுருட்டிக் கொண்டான்.

தோழர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து பத்திரிக்கை விற்றனர். மாலை 4 மணிக்கு சீருடை அணியாத ஒரு போலீசு வந்துஒரு தோழரின் கையைப் பிடித்துஇழுத்தான். தோழர்கள் கையைஎடுக்கச் சொல்லி எதிர்க்கவே விட்டுவிட்டான்.

'போலீசை தாக்கிப்பேசாதே! யார் தப்பு செய்யவில்லை?' எனக் கேட்டு ஆசிரியை கல்பனா சுமதியை கற்பழித்ததை நியாயப் படுத்தினான். தனக்குதுணையாக பேருந்தில் இருந்த இரு போலீசையும் அழைத்துக் கொண்டான்.

அவனது பேச்சின் யோக்கியதையை தோழர்கள் அம்பலப்படுத்தியதும் கண்டு கொள்ளாமல் நகர்ந்துவிட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

உடனே தகவல் தரவேண்டுமென பலரை மிரட்டியும், கம்பம் நகரில் எந்த அச்சகமும் வி.வி.மு. போஸ்டர் அச்சிடக்கூடாது என தடை செய்தும் கெடுபிடி செய்தனர்.

இருப்பினும் கையால் 100 போஸ்டர் எழுதி 26ம்தேதி காலை மோகன், மருதமுத்து ஆகிய இரு தோழர்களும் திட்டமிட்டபடி அதை ஒட்டினர். அப்போது போலீசு வந்து ஒட்டிய போஸ்டர்களை கிழித்து தோழர்களை இழுத்துச் சென்றன.

ஒரு கையில் பசைவாளியும் மறுகையில் சுவரொட்டிகளையும் தாங்கியபடி பேருந்து நிலையம் முதல் போலீசு நிலையம் வரை தோழர்கள் முழக்கமிட்டுச் சென்றனர். பீரங்கித் திருடன், ஈழக் கொலைகாரன் பாசிச ராஜீவையும் அவனது ஏவல் நாய்களான போலீசின் அராஜகத்தையும் மக்கள் மத்தியில் நன்றாக தோலுரித்தனர். சுவரொட்டி பிரச்சாரத்தைவிட தோழர்களின் முழக்கங்கள் பிரச்சாரப் பணியை இன்னும் சிறப்பாகச் செய்தன.

போலீசு நிலையத்தில் தோழர்களை விசாரணை செய்து அங்க அடையாளங்களைக் குறித்துக் கொண்டனர். இதையெல்லாம் கண்டு பயந்து விடுவார்கள் என்று நினைத்த போலீசு, தோழர்களின் உறுதியைக் கண்டு வேறு வழியின்றி இரவு எட்டு மணிக்கு அனுப்பிவிட்டனர்.

இவண்,
விவசாயிகள் விடுதலைமுன்னணி,
உத்தமபாளையம்.



போலீசின் இந்த அரட்டல் உருட்டல்களுக்கு மசிபவர்களல்லபுரட்சியாளர்கள் என்பதை மீண்டும் நமது தோழர்கள் நிரூபித்துக் காட்டிபோலீசு மூஞ்சியில்கரியைப் பூசினர்.

—மக்கள் கலை இலக்கியக்கழகம்,
கடலூர் கிளை.

# மதுரைகலெக்டரின் அரிய கண்டுபிடிப்பு: மழை பெய்தால் தண்ணீர் வரும்

கடந்த 10 ஆண்டுகளாக உசிலை பகுதி காய்ந்து கரடு தட்டி பாலைவனமாக மாறி வருகிறது. பஞ்சம் பிழைக்க குடும்பம் குடும்பமாக, கிராமம் கிராமமாக மக்கள் வெளியேறுவது நியதியாகிவிட்டது. காரணம் திருமங்கலம் கால்வாயில் தண்ணீரில்லை

பெரியார் அணையிலிருந்து பாசன வசதிக்கென திருமங்கலம் பிரதான கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. தண்ணீர் முறையாக வந்து 10 ஆண்டுகளாகிறது. பெரியார் அணை 152அடி கொள்ளளவாக இருந்ததை 136 அடியாக குறைத்ததோடு, புதிய கிளை வாய்க்கால்கள் வெட்டியதே இதற்குக் காரணம். பெரியார் அணை மட்டத்தை மீண்டும் 152 அடியாக உயர்த்தி பாசன வசதியை முறைப்படுத்த அரசு மறுக்கிறது. மக்கள் வரிப்பணத்தில் தின்று கொழுத்த அதிகாரவர்க்கமோ பிரச்சினைக்காக போராடும் விவசாயிகளை சுட்டுப் பொசுக்குகிறது.

ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகள் அவ்வப்போது ஓட்டுக்காக இந்தப் பிரச்சினையை ஊறுகாய் போல தொடுவதுண்டு. செப்டம்பரில் விவசாயிகள் மாவட்ட ஆட்சியாளரிடம் (கலெக்டரிடம்) முறையிட்டபோது கிளிஜோசியக்காரன் போல மழை பெய்தால் தண்ணீர் விடுகிறோம் என திமிராக பேசியுள்ளார் தேவராஜ்.

போராடினால் மட்டுமே பிரச்சினை தீரும் என்றுணர்ந்த உசிலை விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் போராட அறைகூவி சிறு பிரசுரம் அச்சிட்டு வினியோகித்தனர். இந்த பஞ்ச காலத்திலும் மக்கள் ரூ 1100 நிதியளித்தனர். மக்களின் ஏகோபித்த ஆதரவும் பங்களிப்பும் கண்டஞ்சிய மாவட்ட ஆட்சியாளர் 120 அடி நீர்மட்டம் 117 அடியாக குறைந்த பின், நவம்பர் 15ல் தண்ணீர் விடுவதாக அறிவித்தார். ராஜீவ் வருகையை ஒட்டி பிரச்சினையாகி விடக்கூடாது என்பதற்கான பொய்யான அறிவிப்பே இதுஎன மக்களிடம் அம்பலப்படுத்தப்பட்டது.

அணை நீர்மட்டத்தை அதிகரிக்காது புதுக்கால்வாய்கள் வெட்டி மக்கள் மத்தியில் மோதலை தூண்டிவிடும் அதிகார வர்க்கத்தினரின்துரோகத்தை அம்பலப்படுத்தி 19-10-88 அன்று 70சைக்கிளில் 20 கிராமங்களுக்கு ஊர்வலம் சென்று பிரச்சாரம் செய்தோம். பொதுக்கூட்டத்திற்கு 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து ஆதரவளித்தனர்.

# குடிநீர் கோரி ஆர்ப்பாட்டம்

18.10.88 அன்று ம.க.இ.க. கடலூர் கிளையின் சார்பில் நகராட்சி அலுவலகம் முன்பு காலிப்பானை உடைப்புப் போராட்டம் நடந்தது.

உப்பு நீருக்குப் பதிலாக நல்ல குடிநீர் வழங்கக் கோரியும், எல்லாப் பகுதி மக்களுக்கும் தண்ணீர் வழங்கும்நேரத்தை அதிகப்படுத்த கோரியும் மஞ்சை நகர் மணிக்கூண்டிலிருந்து தோழர் சக்கரை தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு நகராட்சி அலுவலகம் அடைந்தது. ஊர்வலத்தில் பெண்கள் காலிப் பானைகளுடன் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டத்தின்போது நகராட்சியின் நிர்வாகச் சீர்கேடு மற்றும் ஊழல்களினால்தான் இந்த செயற்கையான குடிநீர் தட்டுப்பாடு உருவாகியிருப்பதையும், வீட்டு வரியை மூன்று மடங்காக உயர்த்தியதன் மூலம் கிடைக்கும் வருமானம், மற்றும் அரசுப் பொருட்காட்சி நடத்தியதில் கிடைத்த வருமானம் இவைகளை கொண்டு சில லட்ச ரூபாய் செலவில் இன்னும் ஆழ்குழாய் கிணறுகளை அமைத்தால்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்பதை விளக்கியும், நிர்வாகம் தனக்கு வருமானம் இல்லைஎன்று பகல் வேடம் போடுவதை தெளிவாக அம்பலப்படுத்தியும் கடலூர் கிளை செயலர் தோழர் கலாநிதி பேசினார். இப்போராட்டம் பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்தது.

இவண்,
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

# தொழிற்சங்க சுல்தான்களின் பீதி

தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் வகிக்கும் தொழிற்சங்க சுல்தான்களுக்குக் கிலிபிடித்து விட்டது. கடந்த அக்டோபர் 18-19 தேதிகளில் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கள் நடத்திய திடீர்—தன்னெழுச்சியான போராட்டங்கள் போன்றவை மேலும் வெடிக்குமானால் தமது பிழைப்பில் மண் விழுந்துவிடும் என்று பீதியடைந்து போயுள்ளார்கள். காங்கிரசு, திமுக, அதிமுக போன்ற கட்சிகளின் தொழிற்சங்கங்களுக்கு இவை ஒன்றும் புதிதல்ல. துரோகத்தனம் செய்து, தொழிலாளர்களின் நியாயமான கோபாவேசத்துக்கு இலக்கான பல சம்பவங்கள் உண்டு. ஆனாலும் கருங்காலிகளை வைத்துக் கொண்டு "தொழில்" நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

மலடுதட்டிப் போன தொழிற்சங்க செக்குமாடுகளை வைத்து, தரகு வியாபாரம் நடத்தி வரும் போலிக் கம்யூனிஸ்டுகள்தான் குளிர்—காய்ச்சல் கண்டவர்களைப்போல கூச்சல் போடுகிறார்கள். தொழிற்சங்க சுல்தான்களின் துரோக ஒப்பந்தத்திற்கு எதிராக அக்டோபர் 18—19 தேதிகளில் நடந்த போராட்டங்களைக் கொச்சைப்படுத்துகிறார்கள். அவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது அவதூறு சேற்றை வாரி இறைக்கிறார்கள். கேலிச் சித்திரங்கள் வரைந்து அவமானப்படுத்துகிறார்கள். தம்முடைய வசூல் "சாம்ராஜ்யம்" பறிபோய்விடக் கூடாதே என்கிற பதற்றம் அவர்களுடைய பிரச்சாரங்களில் தெரிகிறது.

போக்குவரத்துக் கழக, அரசு அதிகாரிகளுடன் தொழிற்சங்கத் தரகர்கள் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போதே 20 சதவிகித போனசு, 1000 ரூபாய் ஊக்கத்தொகை; 100 ரூபாய் இடைக்கால நிவாரணம், 86 செப்டம்பரிலிருந்து பஞ்சப்படி பாக்கி போன்ற கோரிக்கைகள் வைத்தனர்; அவற்றை ஏற்று அக்டோபர் 18ந்தேதிக்குள் ஒப்பந்தம் ஏற்படவில்லையானால், 19ந்தேதி வேலை நிறுத்தம் செய்வதற்காகப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அதற்கான முறையான முன்னறிவிப்போ, தயாரிப்போ யாரும்செய்யவில்லை. தொழிலாளர்கள் தாமே, தன்னெழுச்சியாக சுண்ணாம்புக் கட்டிகளால் பேருந்துகளில் எழுதியிருந்தனர்.

அக். 18ந்தேதி இரவுவரை கோட்டையில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. அதன் போக்கு பற்றி எதுவுமே தொழிலாளர்களுக்குத் கூறப்படவில்லை. தலைவர்களைப் பூட்டி வைத்துக்கொண்டு, வெளியே தகவல் விடாமல் பேச்சு வார்த்தை நடப்பதாக வதந்தி உலவியது. முடிவை அறிந்துகொள்ளும் ஆவலுடன் கோட்டை முன் பல தொழிலாளர்கள் திரண்டிருந்தனர்.

பிறகு நடந்தது பற்றி பின்வருமாறு போலிக்கம்யூனிஸ்டுகள் புளுகுகின்றனர். "அக்-18ந்தேதி கோட்டையில் பேச்சுவார்த்தை முடிந்து அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும் வெளியே வந்தார்கள். கோட்டையில் அப்போது கூடியிருந்த சிலநூறு தொழிலாளர்கள் மத்தியில் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. தொழிற்சங்கத் தலைவர்களைப் பேசவிடக் கூடாது என்று சிலர் கூச்சலிட்டனர்" (போக்குவரத்துத் தொழிலாளி; நவ. இதழ்.)

ஒப்பந்த முடிவு தெரிவதற்கு முன்பே காத்திருந்த தொழிலாளர்கள் மத்தியில் கூச்சலும் குழப்பமும் நிலவுமா? தலைவர்களைப் பேச விடக்கூடாது என்று யாராவது கூச்சலிடுவார்களா? நடந்தது இதுதான்: ஒப்பந்த முடிவு தெரிந்தவுடன், நம்பிக்கைத் துரோகம் நடந்து விட்டதாக தொழிலாளர்கள் கருதினார்கள். அதன் விளைவாக இயல்பான, நியாயமானகோபாவேசம்அடைந்தார்கள்.

அவர்களை அமைதிப்படுத்தி, போலிக் கம்யூனிஸ்டுத் தொழிற்



## சவால் விட்டார்கள்! சரணடைந்தார்கள்!

புரட்சிகர ஆசிரியர் குழுவிற்கு, வணக்கம்! தோழர்கள் அறிவது,

அக்டோபர் 17ம் தேதியன்று 6.30 மணி மாலை வானொலி செய்தியில் "அரசுபோக்குவரத்து கழக ஊழியர்களுக்கான போனசு பிரச்சினை சுமுகமாக தீர்ந்தது" என முதல் அறிவிப்பு வந்தது. ஒரு சில தொழிலாளர்களே அச்செய்தியை நம்பினர். இது அரசின் பொய்ப் பிரச்சாரமாக இருக்கும் என்று பெரும்பாலோர் நம்பினோம். எனவே அன்றைய வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறாமல் பணிமனையிலேயே உண்மைச் செய்திக்காக காத்திருந்தோம்.

நிர்வாகம் வேலைக்கு அழைத்தபோது "பேச்சு வார்த்தைக்கு சென்ற பேரவைத் தலைவர்களின் அதிகார பூர்வமான அறிவிப்பு வந்தால் தான் வேலைக்குத் திரும்புவோம்" என்று தலைவர்களின் முடிவை எதிர்நோக்கியிருந்தோம்.

சிஐடியு கிளைச் செயலாளர் "கட்டு (டிக்கெட் புக் பண்டல்) எடுங்க வந்தால் பார்த்திக்கிடுவோம்" என்றார். ஒரு சிலர் எடுத்தனர். பெரும்பாலானோர் எடுக்கவில்லை. இரவு 12.30 மணிக்கு அதிகார பூர்வமான செய்தி வந்தது. வானொலி கூறிய அதே தொகைதான் என்று தெரிந்தது.

ஆவேசமடைந்த தொழிலாளர்கள், "துரோக ஒப்பந்தம் ஒழிக," "துரோக பேரவைத் தலைவர் ஒழிக" "தொழிலாளர்களை அடகு வைத்த பேரவைத் தலைவர்களை தண்டித்தே தீருவோம்" என்று உணர்வு பூர்வமாக பெரும்பாலான தொழிலாளர்கள் கோஷங்கள் எழுப்பினோம் தொழிலர்ளர்கள் "நமக்கு துரோகமிழைத்த சங்கங்கள் தேவையில்லை, அனைத்து சங்க போர்டுகளையும் பிடுங்குவோம், வால் போஸ்டர்கள் அடித்து ஒட்டுவோம்" என்றுமுடிவெடுத்தனர்.

அதன்படி அந்தந்த சங்க உறுப்பினர்கள் அந்தந்த போர்டுகளை அகற்றுவது என முடிவு செய்து அகற்றி விட்டோம். போஸ்டர்களும் அடித்து ஒட்டப்



படிப்பகம்

www.padippakam.com

சங்கத் தலைவர் சவுந்தரராசன், ஒப்பந்த முடிவுகளையும் அதன் பலன்களையும் விளக்கினாராம். தவறான அடிப்படையில் வந்த பல சந்தேகங்களுக்கு விளக்கம தரப் பட்டதாம் 'பிறகு கூட்டத்தில் ஒரு பகுதியினர் அமைதியாக கலைந்து சென்றனர். ஒரு பகுதி கூச்சல் போட்டுக் கொண்டே போனது.

"இந்தச் சம்பவத்தைத் தான் முழுக்கத் திரித்து தலைவர்கள் 'கேரோ' என்றும், சவுந்தரராசன் தாக்கப்பட்டார் என்றும் ஓடி ஒளிந்தார் என்றும் இஷ்டத்துக்குப் பொய்கள் பரப்பப்பட்டன.

"அங்கிருந்துபோன ஒரு சிறு கும்பல் பாரிமுனையில் பஸ்களை அடித்து ரகளை செய்து பஸ்களை பணிமனைக்கு அனுப்பியது. புரசைவாக்கம், சென்ட்ரல் போன்ற வேறு சில பகுதிகளிலும் இதேபோல் செய்யப்பட்டது. இப்படி அராஜகம் செய்யும்போது, பெருந்துரோகம் நடந்து விட்டது என்ற பொய்களையும் பரப்பினார்கள்." (போக்குவரத்துத் தொழிலாளி).

அதன் பிறகு, சென்னையிலுள்ள 13 பணி மனைகளில் கூட்டங்கள் நடத்தி முடிவுகளைத் தலைவர்கள் விளக்கினார்களாம். 'அங்கே விளக்கம்பெற்ற தொழிலாளர்கள் உண்மையை உணர்ந்து கொண்டார்கள்; ஒரு சிறு கும்பல் தனிமைப்பட்டது' என்கிறார்கள் போலிக்கம்யூனிஸ்டுகள்.

ஆனால், சென்னையிலுள்ள வேறு ஆறு பணிமனைகளில், "முன்கூட்டியே மற்ற நோக்கம் கொண்டவர்கள் பொய்களைப் பரப்பி சங்கங்களே கூடாது என்பன போன்ற கோஷங்களை கிளப்பித்தொழிலாளர்களைப்பேதலிக்க வைத்துவிட்டனர். இந்தப் பணிமனைகளில் கூட்டங்கள் நடத்த விடாமல் சிலர் கூச்சல்களைப் போட்டு ரகளை செய்தனர்." (போக்குவரத்துத் தொழிலாளி.)

சென்னை மட்டுமல்ல, வெகு தூரத்திலுள்ள பல மாவட்டப் பணிமனைகளிலும் தொழிலாளர்கள் இந்தத் துரோகத்தனத்துக்கு எதி




துரோகத்தனத்தை எதிர்த்த தொழிலாளிகளை வஹமிகளாக சித்தரிக்கும் கருத்துப்படம் [போக்குவரத்து தொழிலாளி நவம்.-'88]

பட்டன. மூன்று மணி நேரத்தில் அனைத்து சங்கக் கொடிகளும் இறக்கப்பட்டன.

இதை அறிந்த தொழிற்சங்க தலைவர்கள் எங்கள் கிளைக்கு ஓடோடி வந்தனர். வந்தவர்களிடம் "தொழிற்சங்கம் கலைச்சாச்சி! இங்கு யாரும் வரக்கூடாது, எங்களுக்கும் உங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை!" என்று எல்லா சங்கத் தொழிலாளர்களும் கூறினார்கள். சி.ஐ.டி யு கிளைப் பொறுப்பிலுள்ள ஐந்து பேர்களை தவிர எல்லாத் தொழிலாளர்களும் மேற்படி கூறினர்.

தொடர்ந்து விடியற்காலை வரை தொழிலாளர்கள் பணி மனையில் முன்னேப்போதும் இல்லாத அளவில் கருத்துக்கள் கூறினார்கள். ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் ஆலோசனை வழங்கினர். விவாதம் செய்தார்கள். முடிவெடுத்தனர். ஒன்றாகச் சேர்ந்து அமுல்படுத்தினார்கள்.

தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி புதிய ஒரே தொழிற்சங்கம் உருவாக்குவது என்று முடிவெடுத்தோம். சி.ஐ.டி.யு கிளைத் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் இக்கருத்துக்கு உடன்பட மறுத்துவிட்டனர், மறுத்ததால் தனிமைப்பட்டு போனார்கள். காக்கியில் பஸ் சின்னம் பொறித்த கொடி ஏற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில் சி.ஐ.டி.யு சங்கம் தலைமையின் சார்பில் ஒப்பந்தம் விளக்கவுரை கூட்டம் போட முடிவு செய்தார்கள். பெரும்பாலான தொழிலாளர்கள் அப்படி கூட்டம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். "தேர்ந்தெடுத்த ஐக்கியக் குழு கலைக்கப்படாமல் இருக்கும் பொழுது தனியாக கூட்டம் நடத்தக் கூடாது" என்று விரட்டியடித்தோம்.

அதன்பிறகு, ஐக்கியகுழுவை கூட்டினார்கள். கூட்டத்தை முடித்துக் கொண்டு, "நிறுத்தப்பட்ட கூட்டத்தை தேதியை மாற்றி நடத்தப் போவதாக" சி.ஐ.டி.யு. சங்கத்தினர் அறிவித்தனர்.

கூட்டத்தின்போது, தொழிலாளர்கள் பெருந்திளராக சென்று அவர்களிடம் பல கேள்விகளை எழுப்பினர். பதில் சொல்ல முடியாதவர்கள், தொழிலாளர்களை வசைபாடி தீர்த்தார்கள். பெரும் கலவரமாக மாறி, கடைசியில் போலீசு துணையுடன், வெளியிலிருந்து அடியாள்கொண்டு வந்து சிஐடியுவினர் கூட்டம்நடத்தினர். அதில் திமுக சங்கம்மட்டும் பங்கெடுத்தது.

பெரும்பாலான தொழிலாளர்கள் திரும்பவும் போஸ்டர் போட்டோம். "குண்டர்களை வைத்து தொழிலாளர்களை தாக்கிய சிபிஎம் கட்சியின் சிஐடியு தலைமைமீது நடவடிக்கை எடு" என்ற கோஷங்கள் வடிக்கப்பட்டது. ஒப்பந்த விளக்கக்கூட்டத்தில் பேசிய சிஐடியு தலைமை செயலாளர், எஸ். மன்னார்சாமி "கவர்னர் ஆட்சியில் இது வாங்கியதே அதிகம். கவர்னர் ஆட்சி நடவடிக்கை எடுத்தால் ஒன்றுமே செய்ய முடியாது. பேரவை தலைவர்கள் ரூபாய் வாங்கிட்டு கையெழுத்து போட்டதாக சொல்கிறீர்களே, கவர்னர் எந்த கணக்கில் கொடுப்பார்?" என்றார். "உளவு வேலை பார்க்கிறார்கள்சிலர்" என்று பொதுவாக, அலித்தனமாக கூறினார்.

ஏற்கனவே இதற்குமுன் கையெழுத்துப் போட்ட தொழிற்சங்கங்களை ரூபாய்க்கு விலை போனவர்கள் என்று இவரே சொல்லியிருக்கிறார்!' என்று தொழிலாளர்கள் நினைவு கூர்ந்து, வாய்விட்டு சிரித்தனர்.

அருப்புக் கோட்டை, சிவகாசி போன்ற இடங்களிலும், இன்னும் ஏனைய இடங்களிலும் இம்மாதிரி சம்பவங்கள் நிறைய நடந்துள்ளது. தொழிலாளர்கள் அனைவரும் உற்சாகமாக அதே நேரத்தில் உஷாராக இருக்கின்றனர்.

தோழமையுடன வசந்தன்.
நடத்துநர், பாண்டியன் போக்குவரத்துக்கழகம், மதுரை.



படிப்பகம்

www.padippakam.com




சிஐடியு அடைந்துள்ள பீதி! தொழிலாளர்களை அவதூறு செய்யும் கருத்துப் படம். (போக்குவரத்து தொழிலாளி, நவம். '88)

ராக கிளர்ந்தெழுந்தார்கள் என்பதே உண்மை! ''ஒரு சிறு கும்பல்'' ''விஷமிகள்'' என்று போலிக்கம்யூனிஸ்டுகள் அவதூறு செய்யும் இந்தத் தொழிலாளர்கள் பல பணிமனைகளில் பெரும்பான்மையினராக இருந்தனர். ''ரகளை'' ''அராஜகம்''—என்று போலிக்கம்யூனிஸ்டுகள் வசை பாடும் இந்தப் போராட்டங்களில் அவர்களுடைய தலைமையிலான தொழிலாளர்கள் உட்பட எல்லாச் சங்கத்தவரும் கலந்து கொண்டனர். அந்தந்த தொழிற்சங்கத் தொழிலாளர்களே அவரவர் சங்கப் பெயர் பலகைகளைப் பிடுங்கிப் போட்டு உடைத்தனர். அவரவர் சங்கக் கொடிகளை இறக்கிக் கிழித்தெறிந்தனர்; அவரவர் சங்கக் கொடிக்கம்பங்களை வெட்டிச் சாய்த்தனர்.

'ஊக்கத்தொகையை சதவீதக் கணக்கில் மாற்றவே மாட்டோம் என்று இறுதியாக அரசு கூறியிருந்தால் அதற்காக வேலை நிறுத்தம் செய்திருக்கலாம். அதைப் பெற்றுவிட்ட பிறகு வேலை நிறுத்தம் சரியான உத்தியாகாது; உரிய பலனையும் தராது' என்று போலிக்கம்யூஸ்டுகள் நியாயப்படுத்துகிறார்கள். ஊக்கத்தொகை ரொக்கத் தொகையானாலும், சதவிகிதக் கணக்கானாலும், அது ஆண்டுக்கு ஆண்டு, குறைந்தது இவ்வளவு தரவேண்டும் என்கிற விதி இல்லை. நிர்வாகத்தின் விருப்ப அடிப்படையிலான இனாம்-கருணைத் தொகை என்று தான் உள்ளது. ஆனால் அதைக் காட்டி போலிக்கம்யூனிஸ்டுகள் ஏய்க்கிறார்கள்.

''8.33 சதத்தை உடைப்பதென்று அனைத்திந்திய அளவில் தொழிற்சங்கங்கள் மட்டுமல்லாமல் அரசியல் கட்சிகளும் சேர்ந்து முயற்சித்தால் தான் சாத்தியம். ஏனென்றால் சட்டத்திலேயே திருத்தம் வேண்டும்'' (போ.தொழிலாளி) என்று போலிக்கம்யூனிஸ்டுகள் சட்டவாதம்பேசுகின்றார்கள். அப்படியானால் 20 சதவிகித கோரிக்கை வைத்துப் போராடும்படி தொழிலாளர்களை ஏன் அழைத்தார்கள்? வேறு தொழிற்சாலைகளில் இந்தக் குறைந்தபட்ச 8.33 சதத்துக்கு மேல் கோரி போராடி, பெறுவதில்லையா? நட்டமடையும்தொழிற்சாலைகளில் 8.33 தான் கிடைக்கும் என்றால் பல்லவனிலும் நிர்வாகம் அப்படித்தானே கூறுகிறது. அது பொய், 20 சதவிகிதம் கோரிப் போராடலாம் என்று இந்தப் போலிக்கம்யூனிஸ்டுகளே எழுதவில்லையா? (போ. தொழிலாளி—செப். இதழ்.)

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

உங்கள் கரங்களில் தவழும் புதிய ஜனநாயகம் இந்த இதழிலிருந்து நான்காமாண்டில் அடியெடுத்து வைக்கிறது.

மார்க்சிய—லெனிய மா சேதுங் சிந்தனையின் ஒளியில், புதிய ஜனநாயகப் புரட்சியின் பிரச்சாரகன்-அமைப்பாளன் என்ற முறையில் எமது லட்சியப் பயணத்தில், எதிரிகளாலும் துரோகிகளாலும் எவ்வளவுதான்இடர்ப்பாடுகள் வந்தாலும் இம்மியளவும் பணியாமல் புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம் என்று மீண்டும் பிரகடனப் படுத்துகிறோம். இப்புரட்சிப்பணியில் எங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கவும் இணைந்து செயலாற்றவும் உங்களை மீண்டும் அறைகூவியழைக்கிறோம்.

நான்காமாண்டில்அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகத்துக்கு நேரிலும் அஞ்சல் மூலமாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைத்து தோழர்களுக்கும் எமது நன்றியைத் தெரித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர் குழு

உண்மை என்னவென்றால் தொழிலாளர்கள் ஒற்றுமை, பலம், உறுதியைக் கொண்டு நியாயமான கோரிக்கையை அடைய முயலுகிறார்கள். குறிப்பாக இந்த விவகாரத்தில் அனைத்துச் சங்கங்களும் இணைந்து துரோகமிழைத்துள்ளன. அதாவது முழு பலமும், ஆதரவும் இருந்தும் குறைந்த பட்சத் தொகைக்கு ஒப்புக் கொண்டுள்ளனர். அதன் ரகசியம் என்ன? துரோகம்தான்! எனவே தான் ''சங்கங்களே வேண்டாம்'' ''அரசியலற்ற சங்கம்'' ''தொழிலாளர் தலைமையிலான சொந்த சங்கம்'' ''எவன் சந்தா வசூலிக்க வந்தாலும் அடித்துத் துரத்துவோம்'' என்கிற தன்னியல்பான முழக்கங்கள் எழுந்துள்ளன.

''அரசியல் அற்ற சங்கம்'', ''காக்கிச் சட்டைச் சங்கம்'', ''சங்கங்கள் சோரம் போய்விட்டன'', ''சங்கங்களே வேண்டாம்''—என்கிற குரல்களுக்குப் பின்னே, நிர்வாகமும், அதிகாரிகளுமே மிகவும் சாமர்த்தியமாக மறைந்திருப்பார்கள் என்று போலிக்கம்யூனிஸ்டுகள் பீதியுடன் எச்சரிக்கிறார்கள். தொழிற்சங்க உரிமைக்காக தூக்குமரமேறியவர்களின் பேரில், போராட்டங்களில் ரத்தம் சிந்தியவர்களின் பேரில் சபதமேற்கிறார்கள்; சவால் விடுகிறார்கள். சங்கமில்லாமல் போனால் என்ன ஏற்படும் என்று பயமுறுத்துகிறார்கள்.

புரட்சிகர அரசியல்—வர்க்க உணர்வின்றி, தொழிற்சங்க பிழைப்புவாதத்திலேயே வளர்க்கப்பட்டவர்கள் இன்றைய இயக்கத்திலுள்ள முன்னணியினர். அதனாலேயே தொழிலாளர்கள்பலரும் எதிரெதிரான சங்கங்களுக்கும் சந்தாச் செலுத்தி ஒன்றுக்கும் மேற்பட்ட சங்கங்களில் உள்ளனர். தொழிலில், தொழிற்சங்கத் தரகு வேலைக்கு சங்கம் அவசியம் என்பதே அவர்கள் கருதுகிறார்கள். அந்தச் சங்கங்கள் அனைத்துமே ஒன்று சேர்ந்து துரோகமிழைத்துவிட்ட நிலைமையில் மேற்கண்ட ''சங்கமே வேண்டாம்'', ''அரசியலற்ற சங்கம்'' போன்ற நிர்கதியான நிலை எடுக்கிறார்கள். அதை நிர்வாகம் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறது என்றால் அதற்கான முழுப்பொறுப்பும் தொழிற்சங்கத் துரோகத் தலைமையையே சேரும்.

ஆனால் நிலைமை இப்படியே நீடிக்காது. பிழைப்புவாதத் தொழிற்சங்கங்களை முறியடித்து புரட்சிகர வர்க்க உணர்வுடைய தொழிற்சங்கங்களை நிறுவக் கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் தயாராகிறார்கள். தொழிற்சங்க சுல்தான்களின் கொட்டத்தை அவர்கள் ஒடுக்குவார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கத்தேர்தல்:

## கவர்ச்சி வாதத்தில் காலடியில்...




அமெரிக்காவின் 41வது அதிபர் தேர்தலில் ரீகனின் சீடரும், குடியரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் துணை அதிபருமான ஜார்ஜ் புஷ் வெற்றி பெற்றுள்ளார். எட்டாண்டுகளுக்குப்பிறகு ரீகனைத் தொடர்ந்து மீண்டும் குடியரசுக் கட்சியே வெற்றி பெற்றுள்ளது. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் டுகாகிஸ் படுதோல்வி அடைந்துள்ளார்.

"புற்றீசல்கள் போல் கணக்கற்ற ஓட்டுக் கட்சிகள் இல்லை. அடிதடி — தகராறு — வன்முறைகள் இல்லை. கள்ள ஓட்டு— ஓட்டுப் பெட்டிகளை சூறையாடுதல் போன்ற அராஜகங்கள் அங்கில்லை. அமைதியான முறையில்—ஆனால் அனல் பறக்கும் கருத்துப் போராட்டம்தான் நடந்தது" என்று அமெரிக்க ஜனநாயகத் தேர்தல் நாகரீகத்தையும் மாண்புகளையும், முதலாளித்துவ மூதறிஞர்களும்ஏகாதிபத்திய எடுபிடிகளும் எழுதிஎழுதிமாய்ந்து போகின்றனர்.

ஆனால் நடந்து முடிந்த அமெரிக்கத் தேர்தல் இந்த மாண்புகளை எல்லாம் குப்பைக் கூடையில் வீசியெறிந்துவிட்டு, இந்தியத் தேர்தல்களைப் போலவே பரிகசிக்கத் தக்கதாக பரிணமித்துள்ளது. அமெரிக்கத் தேர்தலில் ஜார்ஜ் புஷ்—க்குப் பதிலாக எம்ஜிஆரும், டுகாகிசுக்குப் பதிலாக கருணாநிதியும் போட்டியிட்டுப் பிரச்சாரம் செய்தால் எப்படியிருக்குமோ அப்படியேதான யதார்த்தத்தில் நடந்தது. "உதய சூரியன் எழுகிறது; இருள் விலகுகிறது. விடியல் பிறக்கிறது" என்று தி.மு.க.வினர் தமது தேர்தல்சின்னத்துக்குபொருத்தமாக சொற்கோலம் போட்டு வாக்காளர்களை கவர்ந்திழுப்பது போலவே, 'கிறித்துவ இதிகாச கருத்துப்படி யானைகள்தான் உலகைத் தாங்குகின்றன.எனவே நாட்டைக் காக்களங்கள்யானைச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்" என்று 'படித்தவர்கள் நிறைந்த நாகரிக நாட்டில்' இப்படி கோமாளித்தனமான பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்கினர், குடியரசுக் கட்சியினர்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் டுகாகிஸ் கால் பந்தாட்டக்காரர்களுடன் சேர்ந்துபோட்டோவுக்குப் போஸ் கொடுத்தால், அடுத்த நாளே குடியரசுக் கட்சி வேட்பாளர் குத்துச் சண்டை வீரர்களுடன் நின்று கவர்ந்திழுக்கிறார். டுகாகிஸ் தனது குடும்பத்தோடு நின்று போட்டோ எடுத்து தன்னை பொறுப்புள்ள குடும்பத் தலைவனாகக் காட்டினால், புஷ் தனது பேரக் குழந்லதயை முதுகிலேற்றி யானை சவாரி விளையாட்டு மூலம் பாசத்தைப் பொழிந்து காட்டுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழக பிழைப்பு வாதிகளானஎம்ஜிஆரும் கருணாநிதியும் நீ தமிழனா, நான் தமிழனா என்ற லாவணியில் இறங்கியதைப் போலவே, அமெரிக்க தேர்தலிலும் வேட்பாளர்களின் பூர்வீகம்—பின்னணியைத் தோண்டித் துருவி ஆராய்ந்து அதையொட்டிய லாவணி நடந்தது. ஜார்ஜ் புஷ் அமெரிக்காவின் பூர்வீக 'புராட்டஸ்டண்டு' மதத்தைச் சேர்ந்தவர். ஆனால் டுகாகிஸின் முன்னோர்கள் ஸ்பெயின் நாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய வந்தேறிகள்! ஜார்ஜ் புஷ், முன்னாளில் சி.ஐ.ஏ.வின் தலைவராகவும், ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராகவும் இருந்தவர். டுகாகிசுக்கு அத்தகைய அனுபவம்— தகுதி; ஏதுமில்லை என்றிவ்வாறே முடிவேயில்லாத லாவணிகள் தொடர்ந்தன.

இதைவிட கீழ்த்தரமாகப் போய் ஒருவரது முடியலங்காரம், நடை—உடையலங்காரம் எப்படி உள்ளது என்ற அபிப்பிராயங்களின் அடிப்படையில் அவரது செல்வாக்கு மதிப்பிடப்பட்டது. அவர் வகீகரத் தோற்றம் கொண்டவர்; எனவே பெண்கள் அவருக்குத்தான் பெருவாரியாக வாக்களிப்பர் என்று தரம் தாழ்ந்துபோய் பிரச்சாரம் நடந்தது. இன்னும் குழந்தைக் காப்பகங்களுக்குச் சென்று குழந்தைகளை முத்தமிடுவது, தாய்க்குலங்களின் ஆதரவைப் பெற தனிநடிப்புகள்முதலானவை எம்.ஜி.ஆர் பாணிக்கு அச்சாக இருந்தது. பெரும்பாலான அமெரிக்க மக்கள் தொலைக் காட்சி பெட்டிகளை வைத்திருப்பதால், இதுவரை நடைபெற்ற தேர்தல் செலவுகளை விஞ்சும் வகையில் கோடிக்கணக்கான டாலர் செலவில் இந்தக் கூத்துக்கள் இருகட்சியினராலும் நடத்தப்பட்டு ஒளி பரப்பப்பட்டன.

நாடாளுமன்ற ஜனநாயக மாண்புகளும், நாகரீகமும், கௌரமும் இற்று விழுந்துசுவாச்சி வாத அரசியலும், வன்தூற்றல்—வசை பாடலும் முழு வீச்சில் நடந்தது யானை (குடியரசுக் கட்சியின் சின்னம்) தன் தலைமீது மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறதே, கழுதை (ஜனநாயகக் கட்சியின் சின்னம்) பின்னங்காலால் எட்டி உதைக்கிறது

ஆனால் கவர்ச்சி வாதமும் பொறுக்கி அரசியலும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தர்க்க ரீதியான இழிந்த இறுதி நிலை. தேசிய வெறியும் யுத்த வெறியும் ராம்போயிசமாக அம்பலப்பட்டு தோற்றுப் போகும்போது, கொள்கை அடிப்படையில் மக்களைத் திரட்ட திராணியற்றுப் போகும்போது, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முட்டுக் கொடுக்க கவர்ச்சி வாதமும் பொறுக்கி அரசியலும் முன்னிலைக்கு வருகிறது. இந்த உண்மையை நடந்து முடிந்த அமெரிக்கத் தேர்தல் மீண்டும் நிரூபித்துச் காட்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளின் முற்றுகைப்போர்

# ராஜீவின் தகிடுதத்தங்கள்



25-10-'88; தேர்தலை குறி வைத்து, 6வது முறையாக தமிழகத்தின் கிராமங்களின் குடிசைகளுக்குள் நுழைந்து ராஜீவ்காந்தி ஏழைகளின் குறைகளைக் கேட்கும் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்த அதே நாள்! அக்டோபர் மாதத்தின் கடைசிவாரம்! டெல்லியில் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நடத்திய தர்ணா போராட்டத்தை பாசிச ராஜீவ் அரசு குரூரமான முறையில் ஒடுக்கியது.

விளை பொருட்களுக்கு கட்டுபடியாகும் விலை, விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத்திற்கு நாடு தழுவியஅளவில் முறையான சமச்சீரான கட்டணம் வசூலிப்பது,வெள்ளம்-வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவசாயக்கடன்கள் மற்றும் விவசாய சார்பான வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்வது, குறைந்த பட்சம் 12 சதவீதம் இலாபவிகிதத்தில் விவசாய விளை பொருட்களின்போக்குவரத்துக்கு நாடுதழுவிய அளவில் உள்ள பல தடைகளைஅகற்றுவது, விவசாயதொழிலாளிக்கு ராணுவ வீரர்களுக்கு இணையான சம்பளம் வழங்குவது, பாரதீய விவசாய சங்க உறுப்பினர்களின் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை அகற்றுவது ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கி பாரதீய விவசாய சங்கம் டெல்லி போர்ட்கிளப் மைதானத்தில் காலவரையற்ற தர்ணா போராட்டத்தை அக்டோபர் 26ந் தேதி துவக்கியது.

அக்டோபர் 31ந்தேதி, இறந்த பாசிச இந்திராவின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை போட்கிளப் மைதானத்தில் கோலாகலமாக கொண்டாட இருந்த பாசிச ராஜீவ் கும்பலுக்கு விவசாயிகளின் தர்ணா போராட்டம் பேரிடியாக அமைந்தது.

விவசாயிகளின்கோரிக்கையை எப்போதும் "ஒரு தாயின் பரிவோடு" காங்கிரசு அரசு அணுகித் தீர்ப்பதாக பசப்பியது. பேச்சு வார்த்தைகளின் மூலமே சகலத்திற்கும் தீர்வு காணமுடியும் என்று மூச்சுக்கு முந்நூறு தடவை முழங்கி மத்திய மந்திரிகளை வரிசையாக அனுப்பி விவசாய சங்க பிரதிநிதிகளுடன் ஓயாமல் பேசியது. வெற்று வாக்குறுதிகளை சரஞ்சரமாக வழங்கியது.

உள்துறை மந்திரி பூடாசிங், விவசாயத்துறை துணை மந்திரி ஷியாம்லால் யாதவ், பஞ்சாலை துறை மந்திரி ராம் நிவாஸ் மித்ரா, நாடாளுமன்ற சபா நாயகர்பலராம் ஜாக்கர், சாலை—போக்குவரத்து துறை மந்திரி ராஜேஷ் பைலட் இன்னும் பல மத்திய மந்திரிகள், உயரதிகாரிகள், மேல் மட்ட அரசியல் தரகர்கள் என ஒரு பெரும் படையே விவசாயிகளின் சங்க பிரதிநிதிகளின் காலடியில் தவம் கிடந்தது. போராடும் பெரும் பான்மையான விவசாயிகள் சார்ந்திருக்கும் ஜாட், ராஜ்புத் சாதிய காங்கிரசு தலைவர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டு சாதீய ரீதியாக விவசாய சங்கத் தலைவர்களுடன் உறவை புதுபித்துக்கொள்ள நாயாய் அலைந்தது.

பாசிச கும்பலின் தேன் தடவிய தோட்டாக்கள் எதற்கும் போராடும் விவசாயிகள் இம்மியயவும் அசைந்து கொடுக்கவில்லை. கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வராதவரை இடத்தை காலி செய்யமாட்டோம். போராட்டத்தை வாபஸ் பெறமாட்டோம் என்பதில் உறுதியாக இருந்தனர், விவசாயிகள்.

விவசாயிகளின் போராட்டத்தை கீழறுத்துப்போட, அவர்களுடைய முதுகில் குத்த பசுத்தோல் போர்த்திக் கொண்டு சமரச நாடகமாடிய காங்கிரசுக் கும்பல் தன்னுடைய சதியை அரங்கேற்ற முடியாமல் ஆத்திரமடைந்தது. பேச்சுவார்த்தை —சமரச தீர்வு எனும் பசுத்தோலை கழற்றி எறிந்துவிட்டு,கோரப்பற்களையும் கூரிய நகங்களையும் நீட்டி விவசாயிகளை பீதியூட்டி பணிய வைக்கும் இறுதிக்கட்ட முயற்சியில் இறங்கியது.

குறிப்பாக, போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கால்வயிறாவது உணவளிக்க சக விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்களும், அதை ஏற்றி வந்த டிராக்டர்களும் இடைமறிக்கப்பட்டு, அதில் வந்த விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். போலீசு கும்பலின் மிரட்டலுக்கு அடிபணியாத விவசாயிகள், கும்பல் கும்பலாகச் சேர்ந்து தடையை மீறி உணவுப் பொருட்களைக்கொண்டு செல்லும் போராட்டத்தில் இறங்கினர். போராட்டம் துவங்கிய 5ஆம் நாளன்று—29ந்தேதி காங்கிரசுக்கும்பலின் வெறி உச்சத்தை அடைந்தது. தர்ணா போராட்டம் நடத்துவது—சட்ட விரோதமான செயலாக பாசிசகும்பலால்அதிகாரபூர்வமாகஅறிவிக்கப்பட்டது.

டில்லி, அரியானா எல்லைகளில் பல இடங்களில் விவசாயிகளின் மீது தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, துப்பாக்கி சூடு நடத்தியது. உ.பி—அரியானா எல்லை லோனி பகுதியில் போலீசின் துப்பாக்கி சூட்டுக்கு இரண்டு விவசாயிகள் பலியானார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் ரத்தக் காயங்களுடன் தப்பிப்பிழைத்தனர். அவர்களுக்கும் அரசு பொது மருத்துவமனைகளில் அனுமதி மறுக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம், விவசாயிகளின் போராட்ட மையமான டில்லி போட்கிளப் மைதானம் வெளி உலகிலிருந்து தீவு போல் துண்டிக்கப்பட்டு சுற்றி வளைக்கப்பட்டது. டில்லி, அரியானா, உ.பி போலீசும் ஆயுதம் தாங்கிய துணை ராணுவ கும்பலும் புற்றீசல்போல் விவசாயிகளை மொய்த்துக்கொண்டு எரிச்சல் ஊட்டும் வேலைக்கு ஏவி விடப்பட்டது. போராட்டம் துவங்கிய மூன்றாம் நாளே போலீசின் இந்த வக்கிர வெறியாட்டம் துவங்கியது. உடம்புக்கு முடியாத நிலையிலும் போராட்டத்தில் கலந்துகொண்டு திறந்த வெளியில் படுத்துறங்கி குளிரில் விறைத்து, நோய் கடுமையாகி போராட்ட களத்திலேயே உயிர்நீத்து தியாகியானார், ஒரு முதிர்ந்த விவசாயி. அவரின் உடலைப் பார்வைக்கு வைத்து சக விவசாயிகள் இறுதி மரியாதை செலுத்துவதைக்கூட போலீசுக் கும்பலால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

நடு இரவில் பல போலீசு ஜீப்புகளில் ஒலிபெருக்கிகளைக் கட்டிக் கொண்டு, விவசாயிகள் உடனடியாக தங்களுடைய உத்திரவுகளுக்கு அடிபணிய வேண்டும் என அதிகார திமிரோடு அறிவிப்பு செய்தது. இறந்தவரின் உடலை 5நிமிடத்தில் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும், சட்ட விரோதமாக விவசாயிகள் வைத்திருக்கும் ஆயுதங்கள் அனைத்தும் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிப்பு செய்தது. போலீசின் அதிகார திமிர்தனத்திற்கு தக்கபாடம் கற்பிக்க கூட்டத்திலிருந்து திமிறிக் கொண்டு கையில் கிடைத்த ஆயுதங்களுடன் விவசாய இளைஞர்கள் போலீசை



சுற்றி வளைத்து தாக்க தடுப்பரண் அமைத்த பாசிச கும்பலுக்கு விவசாயிகள் பதிலடி! தடுப்பரண்கள் பிடுங்கி எறியப்படுகின்றன.

நோக்கி முன்னேறினர். முதிய விவசாயிகளும், விவசாய சங்கப் பொறுப்பாளர்களும் இளைஞர்கள் ஆத்திரமூட்டலுக்கு பலியாவதிலிருந்து தடுத்து நிறுத்தினர்.

அமைப்புரீதியாக போலீசு கும்பலின் அதிகாரத் திமிர்தனத்திற்கு தக்க பதிலடிக் கொடுக்கும் செயலில் இறங்கினர். மரணமடைந்த விவசாயின் நினைவாக, அக்டோபர் 27ந்தேதி விவசாயிகளின் தியாகிகள் தினமாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் குறிப்பாக போட்கிளப் மைதானத்தில் நினைவு தினம் நடத்தப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. "விவசாய சங்கத்தின் இந்த முடிவை யாராவது தடுத்து நிறுத்த முயற்சித்தால், அதன் பிறகு இம் மைதானத்தில் எந்தஒரு தலைவருக்கும் நினைவு தினம் கொண்டாட விட மாட்டோம்,இது உறுதி'' என விவசாய சங்கம் வீர சபதமெடுத்தது. இறந்தவரின் உடலை எக்காரணம் கொண்டும் போலீசிடம் ஒப்படைக்க முடியாது என அதிகாரபூர்வமாக அறிவிப்பு செய்தது. விரும்பினால், அவருடைய உறவினர்கள் உடலை இங்கிருந்து எடுத்துச் செல்ல எந்ததடையும் இல்லையென அறிவித்தது.

5நிமிடம் அவகாசம் கொடுத்து ஆட்டம் போட்ட போலீசு வாலறுந்து பின் வாங்கியது. இறந்தவரின் உறவினரை எங்கிருந்தோ தேடிபிடித்துக் கொண்டு வந்து அவரை முன்னிறுத்தி உடலைபெற்றுச் சென்றது. இறந்த உடலின் பின்னால் போலீசுக் கும்பல் இப்படி நாயாக அலைந்ததற்கு காரணம், எங்கே, விவசாய சங்கத்தினர் இறந்தவரை போட்கிளப் மைதானத்திலேயே புதைத்து நினைவுத் தூண்எழுப்பி விடுவார்களோ என்ற பயம்தான்!

இந் நடவடிக்கைகளுக்கு பிறகு, காங்கிரசு — அதிகாரவர்க்கம்— போலீசுகும்பல் உயர்மட்ட அளவில் ஒன்று சேர்ந்து பல முனைகளிலிருந்தும் விவசாயிகளைத்தாக்க மேலும்கீழ்த்தரமான வக்கிரமான முறைகளை அடுத்தடுத்து அவிழ்த்துவிட்டது.

காங்கிரசு பேரணி நடக்கவிருந்த நாள் நெருங்க நெருங்க போட்கிளப் மைதானத்திலிருந்து எப்படியும் விவசாயிகளை விரட்டி விடுவது என்ற வெறியுடன் செயல்பட்டது.

29ந்தேதியிலிருந்து போட்கிளப் மைதானத்திற்கு குடிநீர் கொண்டு செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டது. தனியார் உணவுப் பொருட்கடைகள், மருத்துவ உதவிகள் செய்வோர் மிரட்டப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். '25ந்தேதி ஒருநாள் போட்கிளப் மைதானத்தில் பேரணி பொதுக்கூட்டம் நடத்த அனுமதி வாங்கிவிட்டு, தொடர்ச்சியாக, அவ்விடத்தை விவசாயச் சங்கம் ஆக்கிரமித்துக் கொண்டது சட்ட விரோதம். தலைநகருக்கு பெருமை சேர்க்கும் இவ்விடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அசிங்கப்படுத்துவதுஅநாகரீகமான செயல்' என்று ஓயாமல் புலம்பியது. விவசாய சங்கத்தின் நடவடிக்கை பொது அமைதிக்குபங்கம் ஏற்படுத்துவதுதாகவும்பொது இடத்தைஅசிங்கப்படுத்திசுகாதாரகேடுஉருவாக்குவதாகவும் குற்றம்சுமத்தியது. இன்னும் கீழ்த்தரமாகச்சென்று,போட்கிளப்மைதானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இரவில்செல்லும்பெண்கள் மானபங்கபடுத்தப்படுவதாக புகார்கள் வந்துள்ளதாக வெட்கமில்லாமல் புளுகியது.

போராட்ட மைதானத்தைச் சுற்றி இரவோடு இரவாக வேலி அமைத்து, விவசாயிகளை சுற்றி வளைத்து தாக்கும் வியூகம் அமைத்தது. அம்மைதானத்திற்கு வந்தடையும் இரண்டு பிரதான சாலைகளை மூடி வழக்கமான போக்குவரத்தையும் தடை செய்தது. அதில் பாதசாரிகளைக் கூட அனுமதிக்க மறுத்தது.

ஒன்றரை லட்சம் விவசாயிகள், ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு தங்களுக்குள் தகவல் தொடர்பு வைத்துக் கொள்ள பயன்படுத்திய மைக்ரோ போன் செய்திகளை இடைமறித்து குழப்பம் விளைவித்தது. பேடித்தனமான முறையில் ஒலிபெருக்கிச் சாதனம் பொருத்தப்பட்ட போலீசு



படிப்பகம்

www.padippakam.com

# பாசிஸ்டின் மரண விழா கூத்து

காங்கிரசுபேரணி, பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள கூலிக்கு அமர்த்தப்பட்ட தொண்டர்களை சுமந்துவர இந்திய ரெயில்வே துறைக்கு ஒருமாதத்திற்கு முன்பே அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. ரயில்வே துறையின், நாட்டிலுள்ள அனைத்து வட்டார மேலாளர்களும் டில்லிக்கு வரவழைக்கப்பட்டனர்.

"காங்கிரசு பேரணியில் கலந்து கொள்ள வருபவர்களின் பயணம் சுகமானதாக அமைய வேண்டும்'' என்று அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டது. ரயில்வே கட்டண பரிசோதர்களும், ரயில்வே பாதுகாப்பு போலீசும் "காங்கிரசு தொண்டர்களுக்கு சிரமம் எதுவும் கொடுக்கக்கூடாது''—ஓசி பயணத்தை கண்டுகொள்ளக்கூடாது என வாய்வழி உத்திரவு போடப்பட்டது.

அக்டோபர் 29, 30 தேதிகளில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் டில்லி காங்கிரசு பேரணிக்கு 15 சிறப்பு ரயில்கள் விடப்பட்டன. உண்மையில் இவை 30 ரயில்களுக்கு சமமான நீளமுள்ளவை. இந்த திருட்டுதனம் திட்டமிட்டே செய்யப்பட்டது.

கணக்கு காண்பித்த 15 சிறப்பு ரயில்களுக்குக்கூட அதன் இறுதி நாள்வரை காங்கிரசுக் கும்பலால் கட்டணம் செலுத்தப்படவில்லை. இந்த ரயில்கள் ஓடிய வழித்தடங்களில் வழக்கமாக செல்லும் பயணிகளின் ரயில் பயண நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டு, காங்கிரசு பேரணி ரயில்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டன.

ரயில்வே மந்திரி மாதவராவ் சிந்தியா, துணை மந்திரி மகாபீர் பிரசாத் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இவ்வளவு அதிகார அத்துமீறல்களும் அரங்கேற்றப்பட்டன. கடைசி நேரத்தில் இன்னும் பல சிறப்பு ரயில்கள் ஓசியில் விடப்பட்டது தெரிய வந்தது.

31ந் தேதி பொதுக்கூட்ட மேடையில் காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் குலாம் நபி ஆசாத், "42 சிறப்பு ரயில்களிலும், 25,000 பேருந்து, வேன், லாரிகளில் காங்கிரசு தொண்டர்கள் வந்திருப்பதாக'' கணக்கு சொன்னார்.

● டில்லியில்உள்ள அனைத்து பொது மருத்துவமனைகளிலும் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அக்டோபர் 29, 30, 31 தேதிகளில் விடுப்பு மறுக்கப்பட்டது.

● காங்கிரசு குண்டர்கள் வந்தால் அவர்களுக்கு வைத்தியம் பார்க்க, மருத்துவமனைகளில் படுக்கைகள் காலி செய்யப்பட்டு தயார் நிலையில்வைக்கப்பட்டிருந்தன. இதற்காக, படுக்கையில் இருந்த நோயாளிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். நோயாளிகள் சேர்ப்பது அந்நாட்களில் நிறுத்தப்பட்டது.

டெல்லி மாநகராட்சி, பொதுப் பணித்துறை ஊழியர்கள் இரவும் பகலும் முடுக்கிவிடப்பட்டுபேரணி வழித் தடங்களையும், டெல்லி

விவசாயிகள் துரத்தியடித்ததால், செங்கோட்டை மைதானத்தில், காங்கிரசு பொதுக்கூட்ட மேடை அவசர அவசரமாக தயாராகிறது.



ஜீப்புகளிலும், வேன்களிலும் கர்ண கடூரமான மேற்கத்திய சீரழிவு 'பாப்' இசையை அலற வைத்து, போட்கிளப் மைதானத்தையே பெரும் சத்தத்தில் மூழ்கடித்தது. மைதானத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்த விவசாயிகளின் டிராக்டர்களும், டிரய்லர்களும் பாரம் தூக்கிகள் மூலம் கண்காணாத இடத்தில் கொண்டு போய் தாறுமாறாய் வீசப்பட்டன.

போலீசுக்கும்பலின் இவ்வளவு அட்டூழியங்களும் டெல்லி லெப்டினென்ட்கவர்னர் ரமேஷ்பண்டாரி, டில்லி போலீசு கமிஷனர் விஜய் கரன்சிங், காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் குலாம்நபி ஆசாத் போன்ற கும்பல்களின் நேரடி வழிகாட்டுதல்களின் கீழ் அரங்கேற்றப்பட்டது.

உறுதி குலையாத விவசாயிகள், ஒவ்வொரு நிமிடமும் விழிப்புணர்வுடன்இருந்து எதிரிியைகண்காணித்தனர். கூலிக்கு அமர்த்தப்பட்டகுண்டர்களும், போலீசுரெளடிகளும் பெருந்தொகையில் விவசாயிகள் மத்தியில் ரகசியமாக நுழைந்து வீண் கலவரங்களுக்கு வித்திட முயலும் அபாயம் இருப்பதை உணர்ந்தனர். தங்களுக்குள் நூற்றுக்கணக்கான பாதுகாப்பாளர்களையும், செய்தி பரிமாறுபவர்களையும் தேர்ந்தெடுத்து, பாதுகாப்பை பலப்படுத்தினர். பாசிச கும்பலின் அடக்குமுறையைக்கண்டு அவர்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கவில்லை. பாசிச கும்பலுக்கு, போலீசு கயவாளிகளுக்கு புரியும் மொழியில் பதிலடிக் கொடுத்தார்கள்.

"ராஜீவ் சாகிப் விவசாயிகளுக்கு எவ்வளவோ உதவி செய்கிறார், என்கிறீர்கள். அப்படியே, அவர் ஸ்விஸ் வங்கியில் போட்டிருக்கும் பணத்திலிருந்து கொஞ்சம் எடுத்து, எங்களுடைய மின்சார பாக்கியை எல்லாம் கட்டி, கடன் தொல்லையிலிருந்து எங்களையும் விடுவிக்க கூடாதா?'' என்று காங்கிரசு எடுபிடி பத்திரிக்கையாளர்களை மூக்குடைத்து வாய்விட்டு சிரித்தார்கள்.

பாப் இசையை அலற வைத்து போலீசு ஆத்திரமூட்டிய போது "ஜனாதிபதியின் மூக்குக்கு அருகில் இந்த அநாகரீகமான இசையை இவ்வளவு சத்தமாக வாசிக்கிறீர்களே! அவருக்கு இது நிரம்ப பிடிக்குமோ'' என்றனர். (மைதானத்தை ஒட்டிதான் ராஷ்டிரபதிபவன் உள்ளது) போலீசுக்கும்பல் அசடு வழிந்துக் கொண்டே, எஜமானர்கள்இட்டக் கட்டளையை விடாமல் நிறைவேற்றியது.

சவுக்கு கட்டைகளாலும், இரும்புத் தடிகளாலும் போலீசுக்



படிப்பகம்

www.padippakam.com

செங்கோட்டை பகுதியையும் சுத்தப்படுத்தி வெள்ளையடிக்க விரட்டப்பட்டனர்.

● டெல்லி செங்கோட்டை மைதானத்தில் சர்க்கஸ் நடத்த ஏற்கனவே அனுமதி வாங்கி, வேலையை ஆரம்பித்த தனியார் கம்பெனியின் கூடாரங்கள் இரவோடு இரவாக கழற்றப்பட்டு வீசியெறியப்பட்டன. அங்கிருந்த மிருகங்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு காங்கிரசு மிருகங்கள் தங்க வசதி செய்யப்பட்டது.

● அம்மைதானத்தை ஒட்டியிருந்த கடைகள் அனைத்தும் 31ந் தேதி இழுத்து மூடப்பட்டதோடு, சிறப்பு பாதுகாப்பு படையின் நேரடி கண்காணிப்பின்கீழ் அக்கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பு முழு அளவில் உறுதி செய்யப்பட்டது.

● பேரணி வழித்தடங்கள், மற்றும் செங்கோட்டை மைதானத்தில் எண்ணற்ற இடங்களில் இலவசமாக, சாப்பாடு, சிற்றுண்டி, தேநீர் வழங்கி ஆட்களைக் கவர்ந்திழுத்தனர்.

● இந்தி சினிமா நடிகர் சுனில்தத் 'தியாகி அன்னை இந்திரா நினைவு' மேடையை அலங்கரிக்க 'தொண்டர்கள்' அவரை ஈபோல் மொய்த்துக் கொண்டு 'போட்டோ' எடுத்துக் கொண்டனர்.

ராஜீவ் வழக்கம்போல எதிர்க்கட்சிகளை சாடி, நேரு குடும்பத்தின் மகிமையை விளக்கி விட்டு, தொண்டர்களைப் பார்த்து கையாட்டி பறந்துவிட்டார். வரலாறு காணாத வகையில் நடத்த திட்டமிட்டிருந்த காங்கிரசு பேரணி பொதுக்கூட்டம் பிசுபிசுத்த புஸ்வாணமாகியது! ●

கும்பல், விவசாயிகளைச் சுற்றி வேலி அமைத்தபோது, ''எங்களின் பாதுகாப்பு மீது உங்களுக்கு இவ்வளவு அக்கரையா? பரவாயில்லையே! எங்களுக்கு ஆயுதம் கூட வழங்குகிறீர்களே'' என்று கூறி போலீசு கும்பலை மிரள வைத்து, ரசித்தனர்.

மறுபுறம், கிராமிய பாடல்கள், **பஜன்கள், சடுகுடு விளையாட்டு,** என இளைய விவசாயிகள் முதிய விவசாயிகளை உற்சாகப்படுத்த, முதிய விவசாயிகள் ஒரு கையில் ஹுக்கா புகைத்துக் கொண்டும் இடைப்பட்ட நேரங்களில் சீட்டாட்டம் விளையாடிக் கொண்டும் இடியே விழுந்தாலும் நாங்கள் அசரமாட்டோம் என்ற ரீதியில் தங்களுடைய போராட்டத்தை உறுதியாக அதே நேரத்தில் அமைதியாக நடத்தினர். அக்டோபர் 31ந் தேதி அறிவித்தபடி போட் கிளப் மைதானத்தில் கோலாகலமான காங்கிரசு பேரணி பொதுக்கூட்டத்தை நடத்தியே தீருவது என்ற வெறியுடன், தன்னுடைய மிருக பலம் முழுவதையும் ஒன்றுகுவித்து விவசாயிகளின் மீது காங்கிரசு தாக்குதல் தொடுத்தது. விவசாயிகளின் ஒற்றுமையும் உறுதியும் இமயமலை போல் எழுந்து நின்று பாசிச கும்பலின் தகிடுதத்தங்களை எல்லாம் தவிடு பொடியாக்கியது.

பின்னங்கால் பிடறியில்பட புறமுதுகிட்டோடிய பாசிசகும்பல் வேறு வழியின்றி தன்னுடைய பேரணி பொதுக்கூட்டத்தை டெல்லியின் மறுமுனைக்கு, செங்கோட்டை மைதானத்திற்கு மாற்றியது.

காங்கிரசின் பேரணி—பொதுக்கூட்ட மேடையிலிருந்து தங்களுக்கு ஏதாவது சாதகமான வாக்குறுதிகள் வரும் என காத்திருந்த விவசாயிகள் சங்கத் தலைமை, மீரட் போராட்ட அனுபவங்களுக்கு பிறகு மீண்டும் ஒரு முறை ஏமாற்றம் அடைந்து, பாசிச கும்பலிடமிருந்து மேலும் படிப்பினைக் கற்றது. இன்னும் ஒரு வாரத்திற்குள் அரசிடமிருந்து தங்களுடைய கோரிக்கைகளுக்கு சாதகமான முடிவு வராவிட்டால், சங்கம் மேலும் தீவிரமான போராட்டங்களை நடத்தும் என அறிவித்தது. தற்போது போராட்டத்தை முடித்துக் கொண்டு கலையும் படியும், கிராமங்களுக்கு சென்று அரசுடன் ஒத்துழையாமை போராட்டத்தை முழுமையாக நடத்தும்படியும் விவசாயிகளைக் கேட்டுக் கொண்டது. நிலம் மற்றும் வீட்டு வரிகள், மின்சாரக் கட்டணம் எதையும் அரசுக்கு கட்ட வேண்டாம் என்று விவசாயிகளின் பலத்த கரகோஷத்திற்கிடையே அறிவிப்புக் கொடுத்தது. நம்பிக்கை கீற்றை நெஞ்சில் சுமந்துக் கொண்டு விவசாயிகள் பிரியா விடைபெற்றனர்.

பணக்கார, நடுத்தர விவசாயிகளின் கோரிக்கைகளை மட்டுமே உள்ளடக்கி அத்தட்டு விவசாயிகளை மட்டுமே சார்ந்திருந்து போராட்டத்தை நடத்தியது, விவசாய சங்கத் தலைமை. அச்சங்கத்தின் தலைமையும் முழுக்க முழுக்க இப்பிரிவு விவசாயிகளிலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. எனவே, இப்பிரிவு விவசாயிகளின் வர்க்கத் தன்மையின் முழு வெளிப்பாடாகவே போராட்டம் அமைந்தது.

அரசியல் அற்ற கோரிக்கை, கட்சி சாராதன்மை இவையே தங்களுடைய அமைப்பின் அடித்தளம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது. இதனால் வழி வழியாக வரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத இந்த சுரண்டல் அமைப்புக்குள்ளேயே, இவ்வமைப்பின் அரசியல் பிரதிநிதிகளான ஓட்டுப் பொறுக்கிக் கட்சி தலைவர்களின் கருணைப் பார்வை பட்டாலே தங்கள் பிரச்சினை தீர்ந்து விடும் என நம்பிக்கை வைக்கிறது.

ஓட்டுப் பொறுக்கிகளின் கருணையை பெறுவதற்குதான், அதற்கான நிர்ப்பந்தம் கொடுப்பதற்குதான் — தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துகிறது. இதை அச்சங்கத் தலைமை வெளிப்படையாகவே உறுதி செய்கிறது.

மறைந்த பாசிச இந்திராவுக்கு அஞ்சலி செலுத்துவது முதல் நேற்றுவரை, பாசிச ராஜீவ் கும்பலுடன் சேர்ந்துக்கொண்டு இவர்களின் கோரிக்கையைபுறக்கணித்த, ஒடுக்கிய எதிர்க்கட்சிகள், குறிப்பாக வி. பி சிங் கும்பலின் திடீர் கரிசனம் வரை எந்த விமர்சனப் பார்வையின்றி ஏற்றுக் கொள்கிறது. தங்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக இருக்கும் கூலி – ஏழை விவசாயிகளின் ஆதரவு இல்லாமலேயே தனித்து நின்று போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட முடியும் என மனப்பால் குடிக்கிறது.

இச்சங்கத்தைப் போன்றே அச்சாக கோரிக்கை வைத்து போராட்டம் நடத்திய, நடத்தும் நாராயணசாமி நாயுடு சங்கம் கன்ஷிராம் தலைமையிலான சங்கங்கள் இதுநாள் வரையில் எந்த ஒரு வெற்றியும் பெறவில்லை என்பது மட்டுமல்ல ஆரம்பத்தில் இருந்த செயல்வேகமும், போர்க்குணமும் ஒரு சில ஆண்டுகளிலேயே ஆட்சியதிகாரக் கும்பல்களின் தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும், விலை போன தலைமைகளின் துரோகத்தனத்தாலும் நீர்த்துபோய் சவசவத்து விட்டது.

இதை போராடும் விவசாயிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். ரத்தம் சிந்தி பெறப்பட்ட இப்படிப்பினைகளை உதறித் தள்ளுவது சரியான, நியாயமான தங்களுடைய போராட்டத்தை—தியாகத்தை தாங்களே கொச்சைப் படுத்துவது போலாகும். ●

**அடுத்த இதழில்...**

**இந்திய—சீன எல்லைத் தகராறு:**

**மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்**

**புதிய வரலாற்றுத் தொடர் ஆரம்பம்**

படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் கலாச்சாரப்படையே வெல்லும்

கல்கத்தா— எழுபதுகளில் எந்த வீதிகளில் நக்சல்பாரிப் புரட்சி முழக்கங்கள் தொடர்ந்து எதிரொலித்ததோ, அதே வீதிகளில் இப்போது புரட்சிக் கலாச்சாரப் படையின் முழக்கங்கள்கேட்டது. ஆம்! அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் பேரணி!

அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் (அஇபுபமை—AILRC) மூன்றாவது மாநாடு அக்டோபர் 28 முதல் 30 வரை கல்கத்தாவில் தோழர்சுப்பாராவ் பாணிக்கிராகி அரங்கத்தில் எழுச்சியோடுநடந்தது. தியாகிகளின் செங்கொடியை தோழர் சுனிதி குமார் கோஷ் ஏற்றி வைத்தார்; அஇபுபமை கொடியை தோழர் கே. வி. ஆர் ஏற்றி வைத்தார். தோழர் சுப்பாராவ் பாணிக்கிராகியின் ‘கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்’ என்றபாடல் தெலுங்கு, தமிழ், கன்னடம், மராத்தி, பீகாரி, வங்காளி ஆகிய மொழிகளில் ஒவ்வொரு பத்தியாக எழுச்சியோடு இசைக்கப்பட்டது. தியாகிகளின் நினைவுச் சின்னத்திற்கு உறுப்பு அமைப்புக்கள், தோழமை அமைப்புக்கள் மலர் வைத்து வீரவணக்கம் செலுத்தின. வர்க்கப் போராட்டத்தில் களம் கண்டு மறைந்த தியாகச் செம்மலர்களின்துணைவியர்களும் வீரவணக்கம் செலுத்தினார்கள்.

தொடக்க உரையோடு மாநாடு தொடங்கியது. மாநாட்டின் தலைவர், புரட்சி இயக்கத்தின் ஆதரவாளரும் பிரபல ஓவியருமான தேவவிரத முகோபாத்தியாயா உரையாற்றினார்.

வரவேற்புக் குழுத் தலைவர் சுனிதிகுமார் கோஷ் பேசும்போது தோழர் மாவோ எடுத்துச் சொன்னது போல, பல்வேறு குறிப்பான இந்திய நிலைமைகளைக் கணக்கில் கொண்டு புதிய ஜனநாயகப் புரட்சியும், புதிய ஜனநாயகக் கலாச்சாரப் போராட்டமும் தொடரும் என்று சொன்னார்.

இரண்டாண்டு அனுபவ அறிக்கையைதோழர் கேவிஆர்தொகுத்தளித்தார். மாநாட்டு வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. வட அமெரிக்காவில் உள்ள இந்திய மக்கள் மன்றத்தின் சார்பில் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியும், பனிரெண்டு ஆண்டுகளாக மே.வங்கச் சிறையில் வாடும் இந்தியப்புரட்சியாளர்தோழர் அஜீஸ்உல்ஹக்கின் வாழ்த்துச் செய்தி அவரது துணைவியாராலும் படிக்கப்பட்டன.

ஏகாதிபத்தியச் சுரண்டல், நிலப்பிரபுத்துவக் கொடுமை, ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டங்கள், ராஜீவ் ஊழல் ஆகியவற்றைத் தோலுரிக்கும் ‘ஆவுகான் நாட்டிய மஞ்ச்’ அமைப்பின்கேலிச்சித்திரங்களும், இந்தியசுதந்திரப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட ஓவியங்களும் அரங்கில் திறந்து வைக்கப்பட்டன.

மாநாட்டின் முதல் நாள் “புதிய கல்விக் கொள்கை” பற்றிய கருத்தரங்கமும், இரண்டாம் நாள் “பழமை மீட்பு வாதம், மத வெறி, சந்தைக் கலாச்சாரம், செய்தித் தொடர்புச் சாதனங்களின் பங்கு” என்ற தலைப்பில் ஓர்கருத்தரங்கமும் நடைபெற்றது. முதல்நாள் புரட்சிப் பண்பாட்டு இயக்கம், தமிழ்நாடு சார்பில் கட்டுரையும், இரண்டாம் நாள் ஆவுகான் நாட்டிய மஞ்ச், மகாராட்டிரம் சார்பில் கட்டுரையும் படித்து விவாதிக்கப்பட்டன.



தியாகச் செஞ்சுடர்களுக்கு வீரவணக்கத்துடன் மாநாடு துவங்கியது

29 அனறு மாலை 40 கவிஞர்கள் பங்கு கொண்ட கவியரங்கம் நடத்தப்பட்டது. நீண்ட, குறுங்கவிதைகள் சந்தத்திலும், புதுக்கவிதையாகவும் படிக்கப்பட்டன; சில இசைக்கப்பட்டன; சிலநாடக பாணியில் படிக்கப்பட்டன. சில வங்காளி, இந்தி, தெலுங்கு, மராட்டி மூலத்திலேயே அரங்கேற்றப்பட்டன.

மூன்று நாட்களும் அரங்கில் நடந்த நிகழ்ச்சிகளில் அனைத்து மாநில அமைப்புகளும் (மகஇக உட்பட) சிறப்பான கலைநிகழ்ச்சிகளை அளித்தன. குறிப்பாக அஸ்ஸாம், ஆந்திரக் கலைஞர்கள், பீகார் பெண் தோழர்கள், மே. வங்க, நேபாள இளம் பெண் தோழர்கள் ஆடிப் பாடியதும், பீகார் இளம் தோழர் பாடியதும் சிறப்பான வரவேற்பைப் பெற்றன. முதல்நாள் இரவு, ஆளும் வர்க்க கல்விச் சீர்கேடுகள், புதிய கல்விக் கொள்கையை அம்பலப் படுத்தி எளிய வடிவத்தில் நகைச் சுவை கலந்த வசனங்களோடு ஆவுகான் நாட்டிய மஞ்ச்சால் நடத்தப்பட்டது; பெரிதும் பாராட்டுதலைப் பெற்றது.

மூன்றாம் நாள் மாலை 4 மணிக்குத் தொடங்கிய எழுச்சிமிகு பேரணியில் செங்கொடிகள் படபடக்க சுமார் 5000க்குக் குறையாத புரட்சிக் கலைஞர்கள், புரட்சி விவசாய, தொழிலாளர் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் ஊர்வலத்தில் வீறுநடை போட்டார்கள். கல்கத்தா வீதிகளில் சுமார் 12 கிலோமீட்டர் தூரம் எழுச்சி முழக்கங்கள் அதிரவைத்தன; ஊர்வலத்திலேயே இசைப் பாடல்கள் முழங்கின; பழங்குடிகளின் பறை ஒலிகளோடு சிறு நாட்டியங்கள் ஆடப்பட்டன. இரவு 7 மணிக்கு பொதுக்கூட்டத்திடலை ஊர்வலம் வந்தடைந்தது.

பொதுக்கூட்டம் லெனின் சாரணியை ஒட்டிய சீது—கானு நினைவு மேடை அருகே (இவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டம நடத்தி உயிர்நீத்த சந்தால் விவசாயிகள்) நடைபெற்றது. பாட்டாளிவர்க்க இசை வல்லுநர் தோழர் பரேஷ்தாரின் தலைமையில் கூட்டம் நடந்தது. மாநாட்டு தீர்மானங்கள் விளக்கப்பட்டன; புதிய ஜனநாயகப் புரட்சியில் கலாச்சாரத்தின் பங்கு பொதுவாக எடுத்து விளக்கப்பட்டது.

கூட்டம் சுமார் 9 மணி நேரம் நடந்தது. பேச்சின் ஊடேயும், அதற்குப் பிறகும் இசை நிகழ்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

கள், நாடகம், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதவெறியை எதிர்த்து ஆவுகான் நாட்டிய மஞ்ச் நடத்திய நாடகம் குறிப்பிடத்தக்கது. கூட்டம் முடிந்த விடியல் நேரத்தில் பீகார், மே. வங்க விவசாயிகள் கொட்டு ஒலிக்க தங்கள் ஊர்களை நோக்கி அணி அணியாகப் பயணத்தை மேற்கொண்ட காட்சிகள் என்றும் கண்களை விட்டு அகலாதவை.

மாநாட்டில் ஏற்கெனவே உள்ள RAW, RWAAI, AVHAAN SNM, JNM, PAF, RCM, JKM, KSS-KBS பீகார் போன்ற அமைப்புக்களோடு JANA SUI (ஜனசுய்) —அசாம்; PCF (மக்கள்கலாச்சார மன்றம்)—மத்தியப் பிரதேசம்; JSNM—குஜராத், PALA (மகஇக) —தமிழ்நாடு ஆகிய நான்கு அமைப்புக்கள் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்தனர் தோழர் கே.வி.ஆர் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



சந்தால் விவசாயிகளின் புரட்சிகர கலை நிகழ்ச்சி.

மூன்று நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் தயாரித்த விதம், நடத்திய முறை கம்யூனின் கூட்டுத்துவ உணர்வையும், பாட்டாளிவர்க்க கம்யூனிச உணர்வையும் ஒழுங்கு—கட்டுப்பாட்டையும் பிரதிபலித்தன. வேலைகளில் ஆண்களுக்குச் சமமான சரிநிகராக பெண்தோழர்கள் பங்கெடுத்ததும், மாநாட்டில் உழைக்கும் பெண்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதாகும்.

அ.இ.பு.ப.மை மூன்றாவது மாநாடு—நக்சல்பாரிப் புரட்சிச் சக்திகள் ஒரு பெருஞ்சக்தியாக வளர்ந்து வருகிறது என்பதை நிரூபித்திருக்கிறது.

புதிய ஜனநாயகப் புரட்சி ஓங்குக! அ.இ.பு.ப.மை வாழ்க!

—மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு.

# இளைஞர்களின் எழுச்சிப் பாசறை உதயமானது!

பகத்சிங்— அவன் பெயர் கேட்டாலே காலனியாதிக்க வாதிகள் கதிகலங்கினார்கள். அஞ்ஞான வாதிகளும் அடக்குமுறையாளர்களும் அஞ்சி நடுங்கினார்கள். பகத்சிங்— இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தி—காங்கிரசின் துரோகத்தனத்தைத் தோலுரித்து ஆயுதப் புரட்சிப் பாதையை—கொரில்லா யுத்த முறையைத் துவக்கி வைத்த போராளி! அன்று மட்டுமல்ல, என்றுமே புரட்சிகர இளைஞர்களின் லட்சிய நாயகன்!

அம்மாவீரனின் நினைவை நெஞ்சிலேந்தி பெரும்படையாய் திரண்டுள்ள பகத்சிங் இளைஞர் முன்னணி என்ற புதியபோராட்ட அமைப்பின் தொடக்கவிழா, நவம்பர் புரட்சி நாளில் திருச்சி நகரில் எழுச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது.

திருச்சி—காந்திபுரத்தில் நவம்பர் 6—ம் நாளன்று மாலை கொடியேற்றுதலுக்குப்பின், போராளி பகத்சிங் படத்திறப்பு விழாவோடு பொதுக்கூட்டம் தொடங்கியது. தலைமை உரையை தோழர் முகில் நிகழ்த்த, பகத்சிங் வாழ்க்கை வரலாற்றை தோழர் ராஜகுரு சிறப்பாக பேசினார். பின்னர் இவ்வமைப்பின் உடனடித் திட்டங்களை விளக்கி, பெருகிவரும் சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டி அதை மாற்றுவதற்கு பகத்சிங் இளைஞர் முன்னணி முன் நின்று போராடும் என்பதையும் தோழர் முகில் எடுத்துரைத்தார். இப்புதிய போராட்ட அமைப்பை வாழ்த்தியும், பக்கத் துணையாக என்றும் இருப்போம் என்றும் மக்கள் கலை இலக்கியக் கழக மாநிலச் செயலர் தோழர் மருதையன், தஞ்சை மகஇக செயலர் தோழர் காளியப்பன், திருச்சிமகஇக செயலர் தோழர் முத்து ஆகியோர் பேசினர்.



அடுத்த நாள், நவம்பர் 7 அன்று மாலை தாரா நல்லூர் செக்கடி பஜாரில் பகத்சிங் இளைஞர் முன்னணியின் தாரா நல்லூர் கிளை துவக்க விழா நடைபெற்றது. கொடியேற்றல்—பகத்சிங் படத் திறப்பு விழாவுக்குப் பின் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ராஜகுரு தலைமையுரையாற்றினார். இப்பகுதியின் சுகாதார சீர்கேடுகளை விளக்கி, மக்கள் நலனை முன்னிறுத்தி, இதற்கெதிராக விடாப்பிடியாக போராடுவோம் என்று சூளுரைத்தார். தோழர் தமிழ்மணி நவம்பர் புரட்சியை விளக்கி அதன் வழியில் இளைஞர்கள் திரள வேண்டிய அவசியத்தை விளக்கினார். தஞ்சை மகஇக செயலர் தோழர் காளியப்பன் வாழ்த்துரை வழங்கினார்.

இரு நாட்களிலும் பொதுக் கூட்டத்திற்குப்பின் மகஇக—வின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இடையிடையே மழை பெய்த போதிலும் பகுதி மக்கள் பெருமளவில் திரண்டுவந்து ஆதரவளித்தனர்.

தகவல்:
பகத்சிங் இளைஞர் முன்னணி
திருச்சி.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

அடாது மழை பெய்தாலும் விடாது குதிரைப் பந்தய துவக்க விழாவை நடத்தியே தீருவோம்; என்று சென்னை—கிண்டியில், கொட்டும் மழையில் குதிரைப் பந்தய துவக்க விழாவை கோலாகலமாக நடத்த துணை நின்றது கவர்னர் அலெக்சாண்டர் அரசு. திட்டமிட்டபடி நவம்பர் 5ந் தேதி குதிரைப் பந்தயத்தை துவக்குவதற்கு அனைத்து விதத்திலும் ஒத்துழைத்த கவர்னர் அலெக்சாண்டர் அரசுக்கு துவக்க விழாவில் நெஞ்சார புகழாரம் சூட்டினார்கள் 'ரேஸ்' குதிரை அதிபர்கள்.

இரண்டு ஆண்டு காலமாக கேட்பாரற்று புல் பூண்டுகள் மண்டிக் கிடந்த பந்தய மைதானத்தை மிகக் குறுகிய காலத்தில், பட்டுக் கம்பளம் விரித்த மணிமண்டபம் போன்று அழகுற அமைத்துக் கொடுத்தது, அரசு.

தீவனக் கூடங்கள், தண்ணீர் தொட்டிகள், குதிரைகள் தங்குமிடங்கள் —அதிகப்பட்ச சுகாதார முறைப்படி மறுநிர்மாணம்செய்யப்பட்டன. அதிநவீன வசதியுடைய பந்தயக் குதிரை பராமரிப்பு நிலையங்கள், குதிரையின் முடி திருத்தி அழகுப்படுத்தும் 'மசாஜ்' பார்லர்கள், குதிரையின் களைப்பைப் போக்க சீமைச் சாராய வகையறாக்கள், குதிரையின் தீவன இடங்களில்கூட மின்சார விசிறிகள், அனைத்திற்கும் மேலாக குதிரைகள் தங்க குளிர்பதனம் செய்யப்பட்ட அறைகள்! அரசின் இந்த இந்திரலோக ஏற்பாட்டை தொடர்ச்சியாக பாதுகாக்க அரசு அதிகாரிகள்—'ரேஸ்' குதிரை அதிபர்கள் உள்ளடக்கிய உயர்மட்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அதில் குதிரை மூக்கு மீசைக்காரர் போலீசுக் கமிஷனர் வால்டர் தேவாரமும் ஒருவர்!



இதோ, கிண்டி குதிரை பந்தய மைதானத்திற்கு சில கிலோ மீட்டர் தூரத்திலேயே கல் எடுத்து எறியப்பட்ட குருவிக் கூடுபோல் சிதறி கிடக்கும் இந்த குடிசையைப் பாருங்கள்! சமீபத்தில் சென்னையில் பெய்த சுமாரான மழைக்குக்கூட தாக்கு பிடிக்க முடியாமல் கரைந்து போன குடிசை இது. இடிந்த சுவருக்கிடையே 61 வயது மூதாட்டி சிக்குண்டு இறந்து போனார். அதே நாளில் சென்னையில் வேறு பல இடங்களிலும் வீடிழந்து சிலர் இறந்து போனார்கள். தப்பி பிழைத்தவர்கள் தங்கவும் இடமின்றி தெருத் தெருவாய் அலைந்தார்கள் ஒதுங்க இடம் தேடி!

வெய்யில் காலங்களில் எரிந்து மிச்சமிருக்கும் குப்பங்களை மழைக் காலங்களில் வரும் வெள்ளம் அடித்துச் சென்று விடுகின்றது. மக்களுக்கு அரசு அறிவிக்கும் எரியாத வீடுகளும், இடியாத வீடுகளும் ஓட்டுப் பொறுக்கிகளின் மேடை முழக்கங்களோடு நின்று விடுகின்றது. ஆனால், குதிரைக்கு குளிர்பதன அறை கட்டும் திட்டம் மட்டும் உடனடியாக அமுலுக்கு வருகிறது! குதிரை கீழே தள்ளி குழியும் பறிப்பதுபோல நம்மை ஒட்ட சுரண்டுவதோடு நம் வாழ்வையும் பறித்துக் கொள்ளும் இம்மக்கள் விரோத கும்பலிடமிருந்து நாம் அதிகாரத்தை பறிப்பது எப்போது?

✱



படிப்பகம்